# திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

காலை : 8 17—6—55 வெள்ளி : 14 பக்கங்கள் : விலை 3 அணா மலர் : 46

# ஆவடி சமதர்மம் அசைந்தாடுகிறது!

## அ. இ. கா. தலைவர் தேபாரின் தத்துவார்த்தம்!

ஆவடி காங்கிரஸ் மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் மிக முக்கியமானது "மாதிரி சோஷலிஸ" தீர்மானமேயாகும். அதன் அருமை பெருமைகளை திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் அறியமாட்டார்கள். அதுசளுக்கு இத்தீர்மானத்தின் மகத்துவம் புரியாது. ஆவடி காங்கிரஸைப் பழிக்க வேண்டுமென்பதற்காகவே அத் தீர்மானத்தைப்பற்றி குறை சொல்லி கூப்பாடு போடுகிறார்கள். நமது ஆசியாவின் ஜோதி சீனத்துக்குச் சென்று திரும்பி வரும்போது உடன் கொண்டுவந்த வரப்பிரசாத மல்லவா 'மாதிரி சோஷலிஸம்' இனி ஏழை—நடுத்தர மக்களுக்கெல்லாம் மகத்தான வாழ்வுதான், சந்தேகமில்லை! சந்தேகமில்லை! என்று இப்படியாக தேசியத் தலைவர்களும் தோழர்களும் சிந்து பாடினர். இன்னும் சிலர் பாடிக் கொண்டும் வருகின்றனர்!

தேசியத் தோழர்கள் இவ்விதம் பாடித் திரிவதில்கூட நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. தங்களைவிட முற்போக்கு கொள்கை கொண்டவர்கள் இந்தியத் துணைக்கண்டத்திலும், அகில உலகிலும், ஏன் ஈரேழு பதினன்கு லோகத்திலுங்கூட யாரும் கிடையாது என்று கித்தாப்புப்பேசித்திரியும் கம்யூனிஸ்டுகள் இருக்கின்றார்களே அந்த பிரகஸ்பதிகள் ஆஹா—ஓஹோ! மாதிரி சோஷலிஸ தீர்மானம் ஆவடி காங்கிரசிலே நிறைவேற்றப்பட்டதற்குக் காரணமே கம்யூனிஸ்டு கட்சியின் தீவிர நடவடிக்கைகள்தான்! சீனத்துக்குச் சென்று திரும்பிவந்த நேருஜியின் மனமாற்றம் இத்தீர்மானத்தின் மூலம் சூஸகமாகத் தெரிகிறது; கம்யூனிஸ்டு கட்சியின் குறைந்த பட்ச திட்டத்துக்கும் நேருஜியின் வளர்ந்துள்ள தீவிரத்தன்மைக்கும் பொருத்த நிமித்தம் கச்சிதமாக யிருக்கிறது என்று தாளம் போட்டனர்.

இந்நிலையில், ஆவடி காங்கிரசின் மாதிரி சோஷலிஷம் என்ற தீர்மானம் கடைந்தெடுத்த ஏமாற்றுப் படலம் என்பதை ஆதாரங்களுடன் விளக்கிக் கூறியது திராவிட முன்னேற்றக் கழகமேயாகும். காங்கிரஸ் கட்சியினர் செய்யும் எந்தக் காரியங்களையும் எதிர்த்தேயாக வேண்டும் என்ற எத்தர் மனப்பான்மையிலல்ல, தி. மு. கழகம் "மாதிரி சோஷலிஸம் என்ற தீர்மானத்தின் அவலட்சங்ணகளை அம்பலப்படுத்தியது.

பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல—அத்தீர்மானத்தின் பெயரும் அதில் அடங்கியுள்ள வாசகங்களையும் முதலாளித்துவ முகாமினர் அத்தீர்மானத்திற்கு 'ஆரத்தி' எடுத்து லாலி பாடிய சம்பவங்களையும் முன்வைத்தே தி. மு. கழகம் ஆவடி சோஷலிஸத்தில் மறைந்துள்ள ஏமாற்றுத்தனத்தை மக்கள் மன்றத்தின் முன் எடுத்துக் காட்டிற்று.

இன்னும் சொல்லப்போனல் அரசியல் யூகத்துடன் தி. மு. கழகம் அத்தீர்மானத்தை அலசிப் பார்த்த பிறகே காங்கிரஸ் ஏகாதிபத்ய முகாமினரின் மூலாம் பூசும் பித்தலாட்டங்களைப் பகிரங்கமாக எடுத்துக்காட்டத் துணிந்தது.

எனினும் தேசியத் தோழர்கள் தெளிவு பெற்றார்களில்லை கத்தரிக்காய் முளைத்தால் கடைவீதிக்கு வந்துதானே ஆகவேண்டும். அதுபோலவே மாதிரி சோஷலிசத்திற்கு வடநாட்டு ஏகாதிபத்திய வர்க்கத்தினர் கொடுத்துள்ள மூலாம் எப்படியும் வெளுத்துக்காணே தீரும். அச்சமயத்திலாவது தென்னாட்டுத் தேசியத்தோழர்கள் உண்மை உணராமலிருகக முடியுமா!—எனவே காலம் அவர்களின் மயக்கத்தைத் தெளியவைக்கும் என்ற நம்பிக்கை கொண்டோம்.

அதற்கேற்பவே தேசியத் தோழர்களின் மயக்கம் தெளிய ஆவடி காங்கிரசின் மாதிரி சோஷலிஸத் தீர்மானத்தைப் பற்றி காங்கிரசின் அதிகாரபூர்வமான பெரியவரே இன்று வியாக்யானம் செய்ய புறப்பட்டுவிட்டார்! யார் அந்த பெரிய மேதாவி என்று கேட்கிறீர்களா? நேரு பண்டிதர் தரித்திருந்த 'கிரீடத்தை' தன் தலை மீது சுமந்து கொண்டு பவனி வருகிறாரே—அனைத்திந்திய காங்கிரசின் தலைவர் தேபார்—அவர்தான், தன் தலைமையில் நடைபெற்ற ஆவடி மாநாட்டில் நிறைவேறிய மாதிரி சோஷலிஸ தீர்மானத்தைக் குறித்து அண்மையில் தத்துவார்த்தம் பேசியிருக்கிறார்!

'காங்கிரஸ் சோஷலிஸ சர்க்காரை நிறுவுவதைவிட மக்கள் மீது சோஷலிஸத் தத்துவங்களைத் திணிப்பதில் தான் அக்கரை கொண்டுள்ளது. அதாவது சோஷலிஸ அடிப்படையிலுள்ள சமூகத்தை அகிம்ஸா முறையில் ஸ்தாபிப்பது, இதல்லாமல் சோஷலிஸ ராஜ்யத்தை நிறுவினுல் மேலதிகாரிகள் எந்தச் சமயத்திலும் சர்வாதிகாரிகளாக மாறிவிடக் கூடும்.''

என்று அனைத்திந்திய காங்கிரஸ் தலைவர் தேபார் அவர்கள் 10—6—55-ம் நாள் ஹைதராபாத் என்னும் நகரில் நிருபர்களுக்கு பேட்டியளித்தபோது ஆவடி காங்கிரசின் மாதிரி சோஷலிஸத்துக்கு தத்துவார்த்தம் கூறியிருக்கிறார்! அருமைத் தோழர்களே ஆவடி காங்கிரசின் மாதிரி சோஷலிஸத்துக்கு முதலாளித்துவம் 'சபாஷ்' பட்டம் கொடுத்ததே அதன் மர்மம் இப்போது புரிகிறதா? சோஷலிஸ சர்க்காரை நிறுவுவது ஆபத்தாம்! அந்தத் தத்துவத்தை மக்களிடையே பிரசாரம் செய்து சமுதாய அமைப்பையே மாற்றிவிடப்படுமாம்! அ. இ. கா. தலைவர் தேபாரே கூறுகிறார்! எப்படி யிருக்கிறது கதை!

மக்களே மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை வேண்டாம்! உலகமே அநித்தியம்! இன்றைக்கிருப்பார் நாளைக்கில்லை! வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்! எனவே தானம் செய்யுங்கள் தருமம் செய்யுங்கள் அதுவே புண்ணியம் என உபதேசம் செய்யும் உலுத்தப் பேர்வழிகளின் மாடவில் தேசிய முகாமின் தலைமைப்பீடம் சோஷலிஷ சமுதாயத்தை அமைக்கப் போகிறதாம்!

மாதிரி சோஷலிஸ தீர்மானத்தைக் கண்டு தனிப்பட்ட முதலாளிகள் அதிர்ச்சியடைய வேண்டியதில்லை அவர்களின் முயற்சிக்கு பாதுகாப்பும் ஊக்கமும் அளிக்கப்படும். மற்றவர்கள் இத்தீர்மானத்தைப்பற்றி கூறும் வியாக்கியானங்களைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை என்று ஆவடி காங்கிரசுக்கு பிறகு நடைபெற்ற அனைத்திந்திய வியாபார முதலாளிகள் ஆண்டுவிழாவில் நேரு பண்டிதர் பேசியிருப்பதையும் நாம் இதுசமயம் நினைவூட்ட விரும்புகிறோம்.

●

'மாதிரி சோஷலிஸ'த்தின் மகிமையே மகிமை! ஆவடி சமதர்மம் எப்படி அசைந்தாடுகிறது பார்த்தீர்களா?

இந்த ஆவடி கூத்தைக் கண்டுதான் பரங்க கண்ணோட்டக் காரர்களுக்கு நேருஜியின் மீது திடீர் காதல் ஏற்பட்டுவிட்டது! தாங்கள இத்தனை காலமாக செய்து வந்த பிரசாரத்தின் எதிரொலி தான் மாதிரி சோஷலிஸ தீர்மானம் என்று கொக்கரித்தனர் குதூகலப்பட்டனர், என்ன ஆச்சரிம் பார்த்தீர்களா? மாதிரி சோஷலிசத் தீர்மானத்தை பெரும் பணத் திமிங்கிலங்கள் என்று அழைக்கப்படும் வடநாட்டு முதலாளிகள் மனப்பூர்வமாக வரவேற்றனர்—நம்நாட்டு கம்யூனிஸ்டுகளும் அத்தீர்மானத்தைத் தலைமீது சுமந்து 'கரகம்' ஆடினர். இவ்வித மறைமுக உறவில் சதிராட இந்தியத் துணைக்கண்டத்தில் வேறு எந்தக் கட்சிக்குமே சாமர்த்தியம் கிடையாது. இந்த வித்தையெல்லாம் வெகுஜனப் போராட்டக்காரர்களுக்கே உரித்தாகிவிட்டதாம்.

இந்த லட்சணத்தில் எங்கள் நேருஜி ரஷ்யாவிலிருந்து திரும்பி வரும்போது "மாதிரி பொதுவுடமை"யைக் கொண்டுவரப் போகிறார் அதைப் பாருங்கள்—தேர்தல் நெருங்கும்போது அந்த சரக்கை அரசியல் மார்க்கெட்டுக்குக் கொண்டுவரப் போகிறோம் என்று மார் தட்டிப் பேசுகிறார்களாம் சில தேசியத் தலைவர்கள்! போலோ மகாத்மா காந்திகி—ஜெய்!

—நக்கீரன்

★

### கடலூர் இரண்டாவது வார்டு தி. மு. கழகத் திறப்புவிழா

12-6-55-ம் நாளன்று நடைபெற்ற இத்திறபபு விழாவின்போது எடுத்த புகைப்படம். உட்கார்ந்திருப்பவர்களில் (இடமிருந்து வலம்) கடலூர் சாமிநாதன், எ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., என். வி. நடராசன், இரா. சாம்பசிவம் (தெ. ஆ. மா. செயலாளர்) கடலூர் (ஓ.டி.) இளங்கோ, விருத்தாசலம் முனுசாமி, எஸ். அஜீஸ், கோவிந்தராசன் கிளைக் கழகத் தோழர்கள்.

# சமுதாயமும்-தொழிலாளரும்

## விபரீத தத்துவம் பேசிடும் கம்யூனிஸ்டுகளே விளக்கம் பெறுவீராக!

பஞ்சாலைத் தொழிலாளர்கள் — ரயில்வே தொழிலாளர்கள் — விவசாயத் தொழிலாளர்கள்--வண்டி இழுக்கும் தொழிலாளர்கள்—மூட்டை சுமக்கும் தொழிலாளர்கள், ஆக இத்தனைத் தொழிலாளர்களையும் நீக்கிய சமுதாயத்தை நாம் காண முடியாது. 'சமுதாயமும், தொழிலாளரும், ஒன்றை ஒன்று பிரிக்க முடியாத அளவில் ஒன்றைஒன்று இரண்டறக்கலந்திருக்கிறது. என்பது நாம் காணுகின்ற அடிப்படை உண்மையாகும்.' 'தமிழர் சமுதாயம்' என்ற வாக்கியத்தை நாம் கேட்கின்ற பொழுது, நம் உள்ளத்தில் ஒருவித உணர்வும், பற்றும், பாசமும், மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. இதற்கு அடிப்படை காரணம் என்ன? என்று நாம் எண்ணிப்பார்ப்போமேயானால் நமக்கு உண்மை நிலை மிகத் தெளிவாகத் தெரியும்.

'தமிழர் சமுதாயம்' என்ற வாக்கியத்தை நாம்-காணுகின்ற பொழுது நாம் அதை சாதியின் அடிப்படையில் பார்ப்பதில்லை. செட்டியார், நாயுடு, முதலியார், வேளாளன், வண்ணான், சக்கிலியன், பறையன் என்ற சாதியின் அடிப்படையில் நாம் காணுகின்ற பேதா பேதத்தை 'தமிழர் சமுதாயம்' என்ற சொல்லின் பொருளிலே நாம் காண முடியாது. அத்தனை சாதிப் பிரிவுகளும் தமிழரின் ஒற்றுமையை சீர்குலைக்க வந்த வஞ்சகர்களின் சூழ்ச்சி என்பது ஓர்புறம் இருப்பினும்கூட, அத்தனை சாதிப் பிரிவுகளும், அவர்களிடையே ஏற்படுகின்ற உயர்வு—தாழ்வு எண்ணங்களும் 'தமிழர் சமுதாயம்' என்ற அடிப்படையில் பார்க்கின்றபொழுது அந்த எண்ணங்கள் மறைந்து விடுகிறது—மாறி விடுகிறது. தொட்டால் தீட்டு என்று கருதுகின்ற அந்த எண்ணங்கள் மறைகிறது—மாறுகிறது என்றால்—தொழில் செய்கின்ற தொழிலாளர்கள் மட்டும் எப்படி சமுதாயத்தைவிட்டு விலகி இருக்க முடியும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

விவசாயத் தொழில் செய்வதால் விவசாயத் தொழிலாளி -பஞ்சாலையில் வேலை செய்வதால் பஞ்சாலைத் தொழிலாளி—ரயில்வே வேலை செய்வதால் ரயில்வே தொழிலாளியே தவிர, 'தொழிலாளிக்கும்—சமுதாயத்திற்கும்' என்ன சம்பந்தம் என்றால் என்ன பொருள்? எனவேதான் தொழிலாளிவேறு, சமுதாயம் வேறு எனக் கூறுவது, அர்த்தமற்ற ஒருவாதமாகும். மேலும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்கள், ஒரேமொழி—நாகரீகம், பண்பு, கலாச்சாரம், பழக்க வழக்கம் உடையவர்களும், முதலாளி, தொழிலாளி, மாணவர், நடுத்தர மக்கள். ஆக இவர்கள் அனைத்தும் உள்ளடக்கி, ஒரே அமைப்பாக்கக் கூடிய ஒரே சொல்தான் 'சமுதாயம் என்பதாகும்.

நாம் எத்தகைய உதாரணங்களை எடுத்துக் காட்டிய போதிலுங்கூட 'சமுதாயம் வேறு, தொழிலாளர் வேறு என்பது மட்டுமல்ல—தொழிலாளருக்கு சமுதாயப் பிரச்சினை முக்கியமல்ல, முக்கிய பிரச்சினை பொருளாதாரம்தான். அந்தப் பொருளாதாரம் மாற்றம் அடைய வேண்டுமானால் நாம் அரசியலைக் கைப்பற்றியாகவேண்டும்' எனக்கூறி ஆட்சிபீடத்தில் அமர தங்களுடைய பார்வையை திருப்புகிறார்களே அன்றி உண்மைநிலை என்ன? என்பதைப் பற்றி சற்றேனும் எண்ணிப் பார்க்கிறார்களா? என்பதை இந்த இடத்தில் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

### சமுதாயம் இருக்கும் நிலை?

"கானமயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாக பாவித்து தன் பொல்லாச் சிறகுகளை விரித்தாடினா''...... எப்படி இருக்குமோ, அப்படித்தான் நமது நாட்டிலே ஒரு சில அரசியல்வாதிகளின் நிலையும்—நினைப்பும்கூட. நாம் கூறி வருகிறோம் பல ஆண்டுகாலமாக' சமுதாயம்—அரசியல்-பொருளாதாரம், இவை மூன்றும் ஒன்றைஒன்று பிணைந்து இருக்கிறது என்று இந்த மூன்று துறைகளிலும்-இந்த நாட்டு மக்கள் விடுதலை பெற்றாலன்றி வாழ்வில்லை. வாழ்வதற்கான வகையில்லை என்பதை நாம் பலமுறை ஆதாரங்களோடு எடுத்துக்காட்டி திட்டவட்டமாகக் கூறிவருகிறோம்.

என்றபோதிலும்கூட சிலர் தம்முடைய பிற்போக்கு விதண்டாவாதத்தை விட்டபாடில்லை. பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே மூடநம்பிக்கைகளை, முறியடித்து, பிற்போக்கு உயர்வு, தாழ்வு எண்ணங்களை—அந்தக் கருத்துக்களை ஆழக்குழிதோண்டிப் புதைத்துவிட்டஒருநாட்டில் பார்ப்பான், பறையன் காணமுடியாத ஒரு நாட்டில்,—பூனை குறுக்கே சென்றால். அபசகுனம் என கருதாத ஒரு நாட்டில்-பஞ்சாங்கத்தை பாராத நாட்டில்—பஜனைப்பாடாத நாட்டில்—தர்ப்பைப்புல்லை கையில் ஏந்தி பிறப்பால் உயர்ந்தவன் எனக் கூறாத ஒரு நாட்டில்—கொடுங்கோல் அரசு செலுத்திய கொடுங்கோலர்களின் கொட்டத்தை அடக்கி—அந்த நாட்டை—ஆட்சிப் பொறுப்பேற்ற சில காலத்திற்குள் பொதுஉடமையாக்கி—அந்த நாட்டில் தனி உடமை ஒழித்து, மாற்றார் வியக்கும் சிங்கார பூஞ்சோலையாக்கினர். இதுதான் வரலாறு காட்டும் உண்மை.

இந்த மாற்றங்கள் ஏற்பட அவர்கள் பட்ட இன்னல்கள்—சிந்திய ரத்தத்துளிகள்—சொல்லொணா கொடுமைகள். நினைத்தாலே நெஞ்சம் பதைக்கும். ஆனால் அவர்கள் செய்யவேண்டிய அவசியம் இருந்தது பொருளாதார மாற்றம்தான்.

ஆனால் இந்த நாட்டிலே அதுமட்டுமா? நம் சமுதாய நிலை என்ன? உலகில் உள்ள எந்த நாட்டிலும் இந்த நாட்டு மக்கள் சமுதாயம்போல் பின்னடைந்து—பிற்போக்கான கருத்துக்களைக்கொண்ட நாட்டை நாம் காண முடியாது. அல்லும் பகலும் அபராது பாடுபடும் பாட்டாளி, திண்டத்தகாதவனாக தாழ்த்தப்பட்டவனாக, சூத்திரனாக ஆக்கப்படும் இந்தக் கொடுமைகளை, மறுமலர்ச்சிக் கருத்துக்களை மலர்ந்துவரும் இந்த இருபதாம் நூற்றாண்டிலே வேறு எந்த நாட்டிலேயும் நாம் காண முடியாது. பல சாதிகளாக, பல மதங்களாக, பல கடவுள்களாக—இப்படி பலப்பல கருத்துக்களும், எண்ணங்களும், ஒன்றாக வாழ்ந்த மக்களிடையே,—நாம் அனைவரும் ஓர்குலம் என வாழ்ந்த மக்களிடையே புகுத்தி இந்த சமுதாயத்தை பாழ்படுத்தி விட்டனர் சில சுயநலக்காரர்கள். இந்த கேடு கெட்ட நிலை வேறு எந்த நாட்டிலும் காணஇயலாது, சமுதாயத்தில் காணுகின்ற இந்த பத்தாம் பசலிக் கொள்கைகளை தகர்த்தெறியாமல், சமுதாய முன்னேற்றம் காணமுடியுமா?

### சமுதாயமும் பொருளாதாரமும்.

சமுதாயத்திற்கும். பொருளாதாரத்திற்கும் என்ன சம்மந்தம் எனக் கேட்கின்ற தோழர்களின் கூற்றை நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போமேயானால், அவர்களுடைய உண்மை நிலை என்ன என்பது வெட்ட வெளிச்சமாக நமக்குப் புலப்படும் சமுதாயம் இல்லை என்றால், பொருளாதாரம் எதற்கு? சமுதாயத்தின் பிறப்புதான்—பொருளாதாரமாகும். அந்த சமுதாயத்தின் நடப்பு முறைக்கு, செயல் படும் தன்மைக்கு பொருளாதாரம் முக்கியத்துவப்படுகிறது—அவசியப்படுகிறது.

உதாரணத்திற்கு ஒன்றை நாம் எடுத்துக் கொள்வோம் இந்த சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவனாக சூத்திரனாகக் கருதப்படுகின்ற ஒருவன் காலையிலே கோழி கூவுவதற்கு முன்னமேயே எழுந்திருந்து கலயத்திலே இருக்கும் பழங்கஞ்சியை—தன் அருமை கண்மணிகளுக்கு வேண்டுமே, மாலை வரை குழந்தைகள் என்ன செய்யும்? எனக் கேள்விக்குறி எழுப்பி, கிழிந்த துண்டை தோளிலே போட்டுக்கொண்டு, ஒட்டிய வயிற்றோடு— குழி விழுந்த கண்களோடு — பரட்டைத் தலையோடு, சம்மட்டியைத் தூக்கவும் சக்தியற்ற நிலையில் தள்ளாடித் தள்ளாடிக் கொண்டு இன்று வேலை கிடைக்குமா? வேலை கிடைத்தாலும் ஒரு ரூபாய் கூலி கிடைக்குமா? என்ற ஏக்கத்தோடு செல்லும் கந்தன்—எப்படியோ அவன் முயற்சியால் வேலை கிடைத்து பனிரெண்டணா கூலியோடு கதிரவன் மறையும் நேரம் வீடு திரும்புகிறான். வழியிலே ஒரு ஆலமரம்—அதன் அடியிலே ஒரு உருவம்—மனித உருவமல்ல—கல்லால் செதுக்கப்பட்ட உருவம். அதுவும் மனித உருவமல்ல. பாதி யானை உருவம்—பாதி மனித உருவம். அதன் பெயர் 'விநாயகர்'. இந்த சமுதாயத்தில் அதற்குக் கடவுள் என்று பெயர். அதற்கு ஒரு புராணமே உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த சிலையைக் காணுகிறான் கந்தன். கண்ணத்தில் இரண்டு போட்டுக் கொள்கிறான், தோப்புக்கரணமும் போடுகிறான்—இரண்டல்ல மூன்று. சாமிக்குப் போடும் தோப்புக்கரணத்திலும் கணக்குண்டு, இரண்டு போடக்கூடாது. மூன்றுதான் போடவேண்டும்,

கடவுளே இதுகுறித்து தன்னுடைய நேர்வாரிசான, பருப்பும் சோறும்—அதில் நிறைய நெய் ஊற்றித் தின்னும் கூட்டத்தாரிடம் மட்டும் சொல்லி அனுப்பி இருக்கிறார் போலும். கடவுள் சம்பந்தமானஎந்த காரியமும் அவர்களுக்கே உரிமையாக்கப் பட்டுவிட்டன. ஏன் என்றால் 'அவாள்' பிரம்மாவின் முகத்தில் பிறந்தவர்கள். இது நாம் கூறுவதல்ல—இது இந்த சமுதாய நடப்பு எண்ணமாகும். இது ஏன்? என்று கேட்கக் கூடாது. எப்படி என்றும் கேட்கக் கூடாது. கேட்டால் சமூக விரோதி, நாத்திகன், கடவுளை நிந்திப்பவன், பிற்போக்குவாதி, குறுகிய 'கண்ணோட்டக்காரன், மார்க்சீயம் தெரியாதவன், கம்பன் காவியத்தை உணராதவன், புராண இதிகாசங்களை பக்தி கண்கொண்டு காணாதவன் என்ற வசை மொழிகளை, கண்டனக் கணைகளை நம்மீது வீசுகின்றனர். நமக்கு நன்றாகத் தெரியும் நாம் கூறுகின்ற இக்கருத்துகளுக்கு எது பரிசாகக் கிடைக்குமென்று. என்றாலும் நாம் கூறுகின்றோம்; தொடர்ந்து கூறுகின்றோம்—இந்த சமுதாயம் இன்றில்லாவிட்டாலும் என்றாவது கண்டிப்பாக உண்மைநிலை உணர்ந்து நல்வழிப்படும் என்ற நம்பிக்கையோடு. அதற்கேற்ப சீர்திருத்தக் கருத்துக்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் அனைத்தும் மடமடவென ஒன்றன்பின் ஒன்றாக சாய்ந்து வருகின்றன. இதுவும் நாம் கூறுவதல்ல, கடந்த நாற்பது ஆண்டுகால நாட்டு நடப்பு வசைமொழியாளர்களுக்கு காட்டும் உண்மை நிலைதான் இது.

"தனக்கு வேலை கிடைத்ததற்கும் பனிரெண்டணா கூலி கிடைத்ததற்கும் "விநாயகர்''தான் காரணம் என என்னுகிறான் கந்தன்—உடனே நடக்கிறான்

12-ம் பக்கம்

# சுவைத்துப் பாரீர்

டபிள்யூ பி.டி. எழிலன்

## மாம்பழ மகாத்மியம்!

செகோசுலோவாகியா தலைநகர்—பரேக். பரேக்கிலிருந்த நேரு அவர்களை அழைத்துவர, ருஷ்யாவிலிருந்து அதி முக்கியப் பேர்வழி (VIP)களைத் தாங்கிச் செல்லும் பிரத்தியேக விமானமொன்று வந்தது. அதிலேறிய நேரு, 7-6-55, செவ்வாய்கிழமை அன்று—ருஷ்ய மணிக்குச் சரியாக—மாலை 6—1க்கு, ருஷ்ய மண்ணை மிதித்தார்.

"இரும்புத் திரை நாடு" ருஷ்யா வென்பது கூற்று! ஆனால் ருஷ்யாவை நேரில் கண்டு திரும்பிய நகைச்சுவையரசு, என். எஸ். கிருஷ்ணன் கூறினார்: ருஷ்யாவில் இரும்புத்திரை இருக்கிறது என்று கூறுகிறார்கள். அது அங்கு என் கண்களுக்குப் புலப்படவேயில்லை. மாறாக இங்குதான் அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளுக்குத் திரையிட்டார்கள். இங்கேதான் அத்திரை காணப்பட்டது எனக்கூறினார்! நிற்க.

பிரதமர் நேரு, மாஸ்கோவிற்கடுத்த, பதினைந்து மைல் தூரத்தில், எங்கே தங்குகிறார்? என்ன செய்கிறார்? எப்படியிருக்கிறார்?—என்பதெல்லாம் பரம இரகசியம்! சிதம்பர இரகசியம்!

ஆனால் குறிப்பிட்டபடி, பொதுநிகழ்ச்சிகளுக்கு வந்து, ருஷ்யத் தலைவர்களோடும், குறிப்பாக ருஷ்யக் குழந்தைகளோடும், சல்லாபமாகவும்; குதூகலமாகவும், மகிழ்ச்சி தவழ, இழைந்துக் குழைந்து, பழகுகிறாராம்! பார்ப்போர், கேட்போர், உள்ளங்களைக் கவர்ந்தே விடுகிறாராம்! புகழ்மேல் புகழாகக் குவித்துக்கொண்டே வருகிறாராம் நேரு பண்டிதர்!

எந்த நாட்டுத் தலைவர்களுக்கும் இதுவரை கிடைக்காத அவ்வளவு அமோக வரவேற்பாம் நேருவுக்கு!

சீனப் பிரதமர் சூ யென் லாய் என்பாருக்குக்கூட கிடைக்காத அத்துணை அந்தஸ்து நேருவுக்கு!—என்று காண்போர் கூறிக்கொள்ளும் பேச்சாக உள்ளதாம்!

மாம்பழ மந்திரமோ!?...ஏன் இருக்கக் கூடாது? நேரு நுழைகிற இடமெல்லாம், மாம்பழமும் உடன் நுழைந்த வண்ணமுள்ளது! அமெரிக்கா சென்றார்—மாம்பழம் உடன் சென்றது! இலண்டன் சென்றார்—மாம்பழம் கூடவே சென்றது! சீனா சென்றார்—தொடர்ந்தது மாம்பழம்! இன்று ருஷ்யாவிலுள்ளார்—கூடைகூடையாக மாம்பழம் விரைந்தது அங்கே! "ரெஃப்ரிஜெரேட்டரில்" அம்மாம்பழக் குவியல் வைக்கப்பட்டுக் கெடாமல் பாதுகாக்கப்படுகிறதாம்!

ருஷ்யாவிடம் விடைபெற்றுக் கொள்ளும்போது "மாம்பழ விருந்து" வைக்கப் போகிறாராம் நேரு!

அதற்குள்ளாகவே நடைபெற்ற ஒரு சில விருந்துகளிலும் மாம்பழ மூட்டையை அவிழ்த்துக் கொட்டித் தின்னக்கற்றுக் கொடுத்தாராம் ருஷ்ய மக்களுக்கு நேரு! மாம்பழத்தால் இந்தியாவிற்குக் கிடைக்கும் பேறு! நிற்க.

இந்திய ஜனாதிபதி, இராஜேந்திர பிரசாத் நேரு மூலம் அனுப்பிய நன்னம்பிக்கை வாழ்த்துச் செய்தியை, ருஷ்ய ஜனாதிபதி வொரோஷிலாவிடம் கொடுத்து அவரிடம் அளவளாவினாராம்!

ருஷ்யப் பிரதமர் மார்ஷல் நிகோலை புல்கானின் அவர்களிடம் உலக அரசியல் விஷயங்களை நெடுநேரம் பேசினாராம் நேரு!

மாஜி பிரதமர், மவ்லாங்கோவிடம் உரையாடி வெளிவிவகார மந்திரி மாலடோவிடம் அரசியல் கருத்துக்களை பரிமாறிக்கொண்டு மற்றத் தலைவர்களுடனும் பேசினாராம்!

இன்றைய ருஷ்யாவின் விசைக்கயிறே அவா கையில்தான் உள்ளது என்று கூறப்படுகிற—"இரும்பு மனிதர்" குருஷீவ் (ருஷ்ய நாட்டு பொது உடமைக் கட்சியின் முதல்—பிரதானச் செயலாளர்) அவர்களுடன் அருகமர்ந்து, தோளோடு தோளிணைந்து, கை கோர்த்துப் பழகிப் பல விஷயங்களைப் பேசியிருக்கிறாராம் நேரு!

இவைகளைவிட மற்றொரு முக்கிய நிகழ்ச்சி—மாஸ்கோவில், கண்ணாடிப்பெட்டிகளுக்குள் அமைதியுடன் வீற்றிருக்கிற மாவீரர் லெனினையும், எஃகு மனிதர் ஸ்டாலினையுங் கண்டார் நேரு! மெய் சிலிர்த்துப் போனார்! மண்ணாண்டு ஓய்வு கொண்டுள்ள மாவீரர்களுக்கு மலர்வளையம் வைத்திட்டார்! வீரவணக்கஞ் செலுத்தினார்! கண்ணீர் மல்கினார்!

உயிரற்ற உடல்களா இவை? உயிரூட்டி உணர்வெழுப்பும் சுடர்களன்றோ?—என பெருமூச்சுவிட்டிருப்பார் நேரு!

ருஷ்ய நாட்டு இத்தலைவர்களைப் போன்று, நம் நாட்டுத் தலைவர்களின் பூத உடல்களையும் அமிலத்தில் ஆழ்த்திக் கண்ணாடிப் பெட்டகத்தில் வைத்திட்டால் என்ன?—என்று ஒரு கணம் நினைத்தேயிருப்பார் நேரு என்று கருதுகிறேன்.

காந்தியின் உடலையும் நாம் இன்று காணக்கூடுமானால், நம்முடைய உணர்ச்சி எத்துணை உயரம் விம்மி எழும்?—என எண்ணியிருக்கமாட்டாரா நேரு? ஆனால் அதை "நமதருமை" இந்து மதம் ஒவ்வாதே! இறந்த உடல் எரியூட்டப்பட வேண்டும், அல்லது புதைக்கப்பட்டுச் சமாதி எழுப்பப்படவேண்டும்! இத்தகைய இக்கட்டை நினைத்து வேதனையும் பட்டிருப்பார் நேரு!

கோயில்களில் இருப்பதாகக் கூறும் "கற்சிலை" கடவுள்களைத் தொழுவதைவிட, இத்தகைய மறைந்த தலைவர்களை, வீரர்களைக் கண்டாலே உண்மை உணர்வர்! உணர்ச்சி வயப்படுவர்! வீரங்கொள்வர்! வீறுகொண்டெழுவர்! தேசநலம் புரியத் துடிப்பர் மக்கள்!—என ஏன் நினைத்திருக்கமாட்டார் நேரு?

ஸ்ரீரங்கம் அரங்கநாதர் திருப்பள்ளிக் கோலத்தைக் கண்டால், மேற் குறிப்பிட்ட உணர்வெல்லாம் எழுமா?—என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டியது தானிங்கே!-நிற்க.

தோழர் ஸ்டாலின் வாழ்ந்த இடத்தையும், பணியாற்றிய இடங்களையுங் கண்டு மகிழ்ந்தார் நேரு.

கிரெம்லின் பொருட்காட்சி சாலையையுங் கண்டு மகிழ்ந்தார் நேரு. அங்கே பதினாறும் நூற்றாண்டில் செய்விக்கப்பட்ட பிரம்மாண்டமான "மாஸ்கோ கண்டாமணி" ஒன்று உள்ளது. அதன் எடை இரண்டாயிரத்து ஐந்நூறு (2500) பவுண்டுக்கும் மேலான நிறையுடைத்ததாம்! அதாவது இரண்டு "டன்"னுக்குத் தாராளமாக மேற்கொண்ட நிறை! அதை ஆட்டினால், அதன் ஓசை மாஸ்கோ நகரமுழுமைக்கும் கேட்குமாம்! ஒரு சமயம் அதை உயரக் கட்டத்தூக்கும்போது கொஞ்சம் உடைந்து விட்டதாம்! அப்படிப்பட்ட "மாஸ்கோ கண்டாமணி"யைக் கண்டு வியந்தாராம் நேரு.

பொதுவுடமை தேசத்து வாதிகளன்றி, வேறு எவருக்குமே இதுவரைக் காண அனுமதிக்கப்படாதிருந்த, அணுசக்தி தயாரிக்கும் தொழிற்சாலையை, இப்போதுதான் முதன்முதலாக **பொதுவுடமை வாதியல்லாத நேருவுக்குக் காட்ட** அனுமதிக்கப்பட்டதாம்!

வேறு பற்பல தொழிற்சாலைகளையுங் கண்டார். தொழிலாளர்களிடம் உரையாடினார். தொழிலதிகாரிகளிடம் விவாதித்தார். ஐந்தாண்டு திட்டங்களைப்பற்றி மிகப் பற்றுடன் வினவி, விஷயமறிந்து கொண்டார். அங்கே அறிந்தவைகளை, நேரு இந்தியா திரும்பியதும், ஆவடி சோஷலிஸத்துடன் ஒட்டவைத்து பார்ப்பாரா?

ஜார் ஆட்சியின்போது, கட்டப்பட்டக் கட்டிடங்களின் அழுத்தத்தையும், அலங்காரங்களையுங் கண்டு மகிழ்ந்தார். அவைகளுள் வழங்கப்பட்ட விருந்துகளில் நேரு கலந்து கொண்டார்.

பல்கலைக் கழகங்களைப் பார்வையிட்டார். பேராசிரியர்களோடு பேசினார். மாணவர்களோடு பழகினார். விளையாடினார் நேரு.

பூமிக்கு அடியில் ஓடிடும் ரயிலில் உல்லாசப் பிரயாணஞ் செய்து மகிழ்ந்தார் நேரு.

நேரு, ருஷ்யா சென்று திரும்பியதில் அவர் சாதிக்கப்போவது என்னென்ன என்பதில் சந்தேகமிருந்தாலும் சாதிக்கப்பட்ட காரியங்கள் இரண்டு கட்டாயம் இருக்கும்! ஒன்று ருஷ்யர்களுக்கு மாம்பழந் தின்னக் கற்றுக்கொடுத்தார். மற்றொன்று இந்திய முறைப்படி கைகூப்பி வணக்கம் (நமஸ்தே) சொல்லக் கற்றுக்கொடுத்தார். இந்தோ ருஷ்யா நட்பு வளர இருமுக்கியமான வழியல்லவா!

## கெல்லர் பரம்பரை!

வயது 75. தோற்றம் கிழம். உள்ளம் இளமை. கலியாணமே ஆகாதமாது. மனிதப் பிறவிக்கு இருக்க வேண்டிய ஆறறிவில் பார்த்தல், கேட்டல், ஆகிய ஈரறிவை பச்சைக் குழந்தைப் பருவத்திலேயேபறிகொடுத்தவர். ஆம்! குருடு! செவிடு! ஆனால் அறிவின் சுடரொளி! அனுபவத்தில் முதிர்ந்த பழம்! கல்வியின் எல்லைக் கோட்டையும் கடந்த நவீன 'சரஸ்வதி'! அச்சீமாட்டிதான் **மிஸ் ஹெலன் கெல்லர்!**

அவர் இவ்வாண்டு துவக்கத்தில் இந்தியாவுக்கு வருகை தந்தார். சென்னைக்கும் வந்தார். பலர் கண்டோம். கேட்டோம். படித்தோம். 'திராவிடன்' மார்ச்சு மாத இதழொன்றும் அவரது வாழ்க்கைச் சித்திரத்தை வாசகர்களுக்கு வழங்கிற்று! அவரது பலவகையான திறமையைக் கண்டு வியந்தோம். எல்லாக் குருடர்களும், செவிடர்களும் **கெல்லர்** ஆக முடியுமாவென பெருமூச்சுவிட்டோம்.

பூக்களைத் தொட்டுப்பார்த்தும், முகர்ந்து நோக்கியும், இன்ன பூ என்று மெய் உரைக்கிறார். செடி, கொடி, மரங்களையும் அவ்வாறே. மிருகங்களைத் தொடுகிறார், ஆனால் அவை கத்தினால் கேளாக் காதுடையவர். எனினும் தொடுதலின் உதவி கொண்டே பூனை, யானை, நாய், பாம்பு, பறவை என்று கூறுகிறார். கரடிக்குக் கைகொடுத்துக் குலுக்கியிருக்கிறார். சிங்கத்தைக் கண்டு கொண்டு தட்டிக் கொடுத்திருக்கிறார். ஒட்டச் சிவிங்கி

12-ம் பக்கம்

திராவிடன்

சென்னை : 17—6—55 : வெள்ளி

# இதுதான் சுதந்திர ஆட்சியா?

திராவிட நாட்டுத் தனி அரசுரிமைக்காகப் பணியாற்றிவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரைத் தாக்கி வசை புராணம் பாடுபவர்களில் நம் மாநிலத்தில் பல ரகத்தினர் உண்டு. வடநாட்டு ஏகாதிபத்யத்தின் தயவால் தங்களின் சுயநல வாழ்வுக்காக மனசாட்சியையும் ஏன் அரசியல் நெறியையும், உண்மைகளையும் அடியோடு மறைத்துப் பேசும் விசித்திரப் பிறவிகள் ஒரு சாரார்.

மற்ளுெரு சாரார் ஏக இந்தியா என்ற போர்வையில் வாயளவில் தீவிரமும் செயலளவில் வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு சமயம் நேரும்போதெல்லாம் முட்டுக் கொடுக்கும் கோஷ்டியினராகும்.

நம் மாநிலத்தின் அவல நிலையை சிற்சில நேரங்களில் உணர்ந்தாலும்கூட வீண் கித்தாப்புக்காக குருட்டுத் தேசியம் பேசி குட்டை குழப்பும் சாரார் ஒருபுறம்!

ஆக இவர்களனைவரும் திராவிட நாட்டுத் தனி உரிமையைத் தட்டிப் பறித்துக் கொழுத்துவரும் வடநாட்டு ஏகாதிபத்யத்தின் ஏஜெண்டுகளாகவும், அடிவருடிகளாக காட்சியளித்து வருகின்றனர்.

இவர்களின் தவருன போக்கினையும் தென்னாட்டுக்கு இவர்களின் நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள சீரழிவையும் எவ்வளவுதான் புள்ளிவிவரங்களுடன் எடுத்துக்கூறினாலும் தெளிவுபெற முயற்சிக்கும் மனவளமும் பெறுவதில்லை.

இத்தகையோரின் கோணங்கித்தனமான செயலின் மண்டையிலடிப்பதைப் போல நடைபெற்றுள்ள சம்பவத்தை மீண்டும் அவர்களுக்கும், அதேசமயத்தில் பொது மக்களுக்கும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

சென்னை மாநில சர்க்காரின் அதிகாரத்திற்குட்பட்ட தாழ்த்தப்பட்ட நலஉரிமை இலாகாவினர் தீண்டாமை சட்ட விளக்கம் குறித்து விளம்பரப்படுத்தி யிருந்த சுவரொட்டிகளைப் பற்றி நாம் ஏற்கனவே விளக்கம் தந்திருந்தோம். அந்த சுவரொட்டியை 3—6—55 இதழிலும் நாம் வெளியிட்டிருந்தோம், எனவே அப்படத்தின் விபரத்தை வாசகர்கள் அறிவார்கள் என்றே நம்புகிறோம்.

எனினும் நம் நாட்டிலுள்ள பிராமண வகுப்பாருக்கு மட்டும் அந்த சுவரொட்டி மனவேதனையைத் தந்துவிட்டதாம்! ஆதலாலே மேலிடமாகிய இந்திய அரசியலாரிடம் முறையிட்டனராம்! உடனே நேரு சர்க்காரிடமிருந்து காமராசர் சர்க்காருக்கு தாக்கீது வந்துவிட்டதாகவும். அதற்கேற்ப விளம்பரப்படுத்திய சுவரொட்டிகளை பிய்த்தெறிந்து விட்டு கைவசமுள்ளவைகளை விளம்பரப்படுத்தாமல் நிறுத்தி வைத்துள்ளனராம் காமராஜ் சர்க்கார்!

அந்த சுவரொட்டியில் பிராமணர்கள் என்ற வார்த்தையே கிடையாது. அந்த உருவம் உச்சிக் குடுமியும் பூணூலும் பஞ்சகச்சமும் அமைந்ததாக வரையப்பட்டிருக்கிறது. இம்மாதிரி அலங்காரத்தில் திராவிட இனத்திலுள்ள சில வகுப்பார் இன்றளவுங்கூட காட்சியளித்து வருகின்றனர்; ஆனால் அந்த வைதீகர்களுக்கெல்லாம் பொத்துக்கொண்டு வராத கோபம் நம் நாட்டுப் பார்ப்பனர்களுக்கு மட்டும் ஏன் உண்டானதோ அறியோம். இதிலுள்ள சிதம்பர ரகசியம்தான் என்னவோ? அல்லது இவ்வித அலங்கோலங்களுடன் நம்நாட்டில் முதன் முதலாகஇறக்குமதியானவர்கள் பார்ப்பனர்கள் தானோ என சந்தேகிக்க வேண்டியிருக்கிறது இந்தஆராய்ச்சியை பிறகுகவனிப்போம்.

தீண்டாமை ஒழிப்பு சட்ட விஷயமாக விளம்பரப்படுத்தியது எந்த ஒரு தனிப்பட்ட கட்சியுமல்ல குறிப்பாக திராவிட இயக்கத்தினர் அல்ல. அரசியலாரே இப்பணியைச் செய்துள்ளனர்.

நம் மாநிலத்தின் சமுதாய பொருளாதார அரசியல் நிலைமையை நம் மாநில சர்க்காரைவிடவேறு எந்தசர்க்காரும் தெரிந்து கொள்ளவோ அல்லது புரிந்து கொள்ளவோ முடியாது. ஆகவே நமது மாநிலத்தின் சூழ்நிலைக்கேற்ப அதுவும் சமுதாய பிரச்னைகுறித்து ஆவன செய்யக்கூட நம் மாநில சர்க்காருக்கு உரிமையில்லையென்றால் இதற்கு சுதந்திர ஆட்சி என்ற பெயர் எப்படிப் பொருந்தும் என்று கேட்கிறோம்? சமுதாய மாற்றத்திற்கான ஒரு சாதாரண விளம்பரத்திற்கே இந்த கெடுபிடியென்றால் நம் மாநிலத்தின் அரசியல் பொருளாதார பிரச்னைகளில் டெல்லி சர்க்காரின் ஆதிக்கம் எப்படி யிருக்கும் என்பதை நாம் விளக்கவும் வேண்டுமோ.

இலங்கை சர்க்கார்—இலங்கை மக்களின் சூழ்நிலைக் கேற்ப சமுதாயச் சட்டங்களைச் செய்ய உரிமையிருக்கிறது. அதில் டெல்லி சர்க்கார் தலையிட முடியாது: அது போலவேதான் பர்மா, பாக்கிஸ்தான், நேபாளம் போன்ற நாடுகளிலும்! ஆனால் எட்டு கோடி மக்களைக் கொண்ட தென்னாட்டின் மிகமிகச் சாதாரண பிரச்னைகளில் கூட வடநாட்டு ஆதிக்கம் சர்வாதிகாரம் செய்கிறது. திராவிடம் தனித்திருந்தால் இந்த கேடுகெட்ட நிலைமைக்கு இடமிருக்க முடியுமா யென்பதை நாட்டுப் பிரிவினையை எதிர்ப்போர்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகத்தான கொள்கையினைக் குற்றம் கூறித் திரிபவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

பிரிட்டனில் கருப்பர்களுடன் சேர்ந்து பணியாற்ற மாட்டோம் என்று நிறத்திமிர் பேசிடும் சில வெள்ளையர்களின் திமிர் வாதத்தை வெள்ளையர்களே எதிர்த்தனர். ஆனால் நம் நாட்டிலோ சமுதாய சீர்திருத்தம் என்றாலே ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் கட்டுப்பாடாக வீண் கூப்பாடு போடுவதும் ஆதிக்க பீடத்தினரிடம் சாடிசொல்வதும் ஒரு சடங்குபோல வளர்ந்து வருகிறது. இப்போக்கு ஒன்றுபட்ட சமுதாய அமைப்பை நிர்மாணிப்பதற்கு நேர்மாறான விளைவுகளையே வளரச் செய்யும் என்பதை நாம் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

ஆகவே தென்னாட்டை—தென்னாட்டு மக்களின் நல்வாழ்வை உறுதிப்பாடு உடையதாகச் செய்ய வேண்டுமானால் திராவிடம் தனி உரிமையைப் பெறுவதைத்தவிர வேறு வழியில்லை என்பதை டெல்லி சர்க்காரின் மேற்கண்ட உத்திரவும் அதற்கு காமராசர் சர்க்கார் மனச்சாட்சிக்கு விரோதமாக கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் நன்கு எடுத்துக் காட்டிவிட்டது. இனியாகிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையைப் பற்றி மூலை முடுக்கும் தென்னாட்டு தேசியத் தோழர்கள் சிந்தித்து தெளிவுபெற வேண்டுகிறோம்.

## தி. வீ. கணேசன் - நாகரெத்தினம்

திருச்சி திராவிடப் பண்ணை உரிமையாளர் தோழர். தி. வீ. முத்துகிருஷ்ணன் அவர்களது இளவல் தோழர் தி. வீ. கணேசனுக்கும், தோழியர் நாகரெத்தினத்திற்கும் 19-6-55 ஞாயிறு காலை 10-மணியளவில் திருச்சி சிந்தாமணி சின்னையாப் பிள்ளை சத்திரத்தில் அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்.

## நடக்க இருப்பவை

**விருத்தாசலம் தி. மு. கழகம்.**

18-6-55 மாலை 6 மணிக்கு வானொலி திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் ஏ, கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் அறிஞர் அண்ணு, அ, பொன்னம்பலனுர், இரா. சாம்பசிவம் ஆகியோர் பேசுவர்.

**பம்பாய் கொலாபா தி மு க.**

18-6-55 அன்று கொலாபா தி. மு. க. சார்பாக மாநில மாநாட்டு நிதியளிப்பு விழா நடைபெறும், தோழர் எ. எஸ். அன்பரசு தலைமையில், தோழர்கள் எஸ். தியாகராசன் ஆரியசங்காரன், த. மு. பொற்கோ மற்றும் பலர் பேசுவர்.

**குன்றத்தூர் தி மு க.**

18-6-55 மாலை 6 மணிக்கு தி. மு. க. பொதுக்கூட்டம் தோழர் டி. கே. சிவகுமாரன் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனுவாசன், டி. எம். கணபதி, டி. என். சம்மந்தம் பேசுவர்.

**கொல்லுமாங்குடி தி மு. க**

19-6-55 ஞாயிறு மாலை 6 மணிக்கு தோழர் என். கிட்டப்பா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, கே. எஸ். சௌந்தரராசன் ஆகியோர் பேசுவர்.

**தலைஞாயிறு தி. மு. க.**

19-6-65 ஞாயிறு மாலை 6 மணிக்கு தோழர் உத்திராபதி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, இரா. ஜோசப், மா. கி. ராமசாமி ஆகியோர் பேசுவர்.

**திருவிளையாட்டம் தி, மு. க.**

20-6-55 திங்கள் மாலை 6 மணிக்கு தோழர் சம்பந்தம் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும் தோழர்கள் சி. பி. சிற்றரசு, கே. எஸ். சண்முகம் ஆகியோர் பேசுவர்.

**பேரூரணி தி. மு. க.**

20-6-55 திங்கள் மாலை 6-30 மணிக்கு கணிப்பதிவு மனைக்கு அருகாமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் எஸ் ஜெயராமன் அவர்கள் தலைமையில் அறிஞர் அண்ணு, அ பொன்னம்பலனுர். என். எஸ். இளங்கோ ஆகியோர் பேசுவர். மாநில மாநாட்டுக்கு நிதியளிக்கப்படும்.

**வெரையூர்பிர்க்கா தி. மு. க.**

20-6-55 மாலை 6 மணிக்கு திருவண்ணமலை வட்டம் வெரையூர் பிர்க்கா தி. மு. க. சார்பில் அழகிரி அவையில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் ந. ரத்தினம் அவர்கள் தலைமைவகிப்பார். அன்று இரவு 9-30 மணிக்கு பிர்க்கா தி. மு. க. அமைப்புக் கூட்டம் நடைபெறும் தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் பேசுவார்.

**பம்பாய்**

20-6-55 மாலை 6-30 மணிக்கு சௌந்தர பாண்டியனுர் பகுத்தறிவு மன்றச்சார்பாக, அன்பகத்தில், ப. தி. மு. க. பொதுச் செயலாளர் எஸ். தியாகராசன் அவர்கட்கும், சட்டதிட்ட அமைப்புக்குழுச் செயலாளர் த. மு. பொற்கோ அவர்களுக்கும் வரவேற்பு வழங்கப்படும். தோழர் மா. இரா. குறள்தாசன் தலைமையில், தோழர்கள் புத்தரசு, எம். பாண்டியன், சா. தர்மராசன் வடவைக்குயில் ஆகியோர் பேசுவர்.

## கோ. வெங்கட்டராமன் - யசோதா

'திராவிட நாடு' துணை ஆசிரியர் தோழர். இராம. அரங்கண்ணல் அவர்களது மைத்துனர் தோழர் வெங்கட்டராமனுக்கும் தோழியர் யசோதாவுக்கும் 23-6-55 வியாழன் காலை 9-மணியளவில் வேலூரில் அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்.

# கேள்வி? பதில்.

**கே: அஞ்சா நெஞ்சனே தி மு. கழகம் தேர்தலில் நின்ருல் எதிர்கட்சிகளெல்லார் தூற்றுவார்களே அதுவு 'விடுதலை' தினமுர வசைமாரியில் இறங்குமே என்ன செய்வீர்கள்?**

**—சி. கண்ணன், பெங்களூர்-3**

ப: வியாதி முதிர்ந்தவனுக்கு டாக்டர் மருத்துவம் செய்யும் போது அல்லது இஞ்செக்ஷன் செய்யும் அவசியம் ஏற்பட்டால் நோயாளி சிரிக்கவா செய்வான். அந்த சமயம் மனவேதனைப்பட்டு முகத்தைச் சுளித்துக் கொள்வானல்லவா, அந்த நோயாளியின் முணுமுணுப்புக்கு அஞ்சி டாக்டர் சிகிச்சை செய்யாமல் இருக்க முடியுமா? அதுபோலத்தான் தேர்தலில் தி. மு. கழகம் நேரடியாக போட்டியிட வேண்டுமென்ற அவசியமும் முடிவும் ஏற்பட்டால் பிறரின் அர்த்தமற்ற கூப்பாட்டுக்கு அஞ்சி ஒதுங்கி விடாது தோழரே—

*

**கே: நம்நாட்டின் தலைவர்கள் அமைச்சர்கள் போன்ருேர் அடிக்கடி ரஷ்யாவுக்குச் சென்று வருகிருர்களே ஆனல் அந்நாட்டின் அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குப் குறிப்பாக இந்தியாவுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்வதில்லையே ஏன்?**

**இரா. அ. பழனிச்சாமி, இராசிபாளையம்**

ப: ரஷ்யத் தலைவர்கள் மற்ற நாடுகளுக்குச் செல்லாத விவரம் எனக்கு திட்டவட்டமாகத் தெரியாது. ஆனல் இந்தியாவுக்கு வராத காரணம்: இப்போதுதான் அதுவும் நேரு பண்டிதரின் சுற்றுப் பயணத்தால் 'இந்திய மாம்பழங்களின் மகாத்மியம்' ரஷ்யத் தலைவர்களுக்குத் தெரிந்திருக்கும், இனிமேல் அவர்கள் வரக்கூடும்!

●

கேள்வி--பதில் ஓர் நல்ல பகுதி சிந்தனைக்கு விருந்து அளிக்கிறது. தெரியாத பதில்களுக்கு கேள்விகளைக் கேட்டு விளக்கம் பெறச் செய்கிறது. ஆம்: 6—5—55 திராவிடன் இதழில் ஆதித் திராவிடன் என்ருல் யார்? என்ற சிக்கலான கேள்விக்கு தகுந்த பதில் அளித்த அஞ்சாநெஞ்சனே உங்கள் பதில் மெச்சத்தக்கது. "புரோகித பரம்பரை தென்னுட்டில் புகுந்து தங்களின் ஆரிய வலையை வீசியபோது அவ்வலையிலே சிக்கிச் சீரழியாத தன்மானத் தமிழர்கள்தான் ஆதித் திராவிடர்கள். அதாவது பார்ப்பனீய சூழ்ச்சிக்கு பலியாகாத பண்புள்ள பழந்தமிழர்கள்" என்று விளக்கம் கூறியிருக்கிறீர்கள். இந்நேர்மையான பதிலுக்கு சரித்திரமும், ஆராய்ச்சியும், அறிஞர்களின் கட்டுரையும் மிகப் பொருத்தமாகக் காணப்படுகிறது!

16-5-45 ல் பி. ஸ்ரீ. அவர்கள் சுதேசமித்திரன் பத்திரிகையில் "தீண்டாமையும் மூன்று ஆசாரியர்களும்" என்ற கட்டுரை எடுத்துக்காட்டாக பழந்தமிழர்களின், அறிவு, மேதைக்குணம் இணைந்து சொல்லப்படுகிறது. அவர் கட்டுரை கூறுவது இதுதான். "விலகிப்போ, தூரமாக இன்னும் தூரத்திலே" என்று பக்தகோடிகள் தீண்டாதவனை நோக்கி கூச்சலிட்டனராம். இந்த காட்டுக் கூச்சலை காதில் வாங்கிக் கொள்ளாது சங்கராச்சாரியார் அவர்களை நோக்கி வணங்கி, "ஏன் சுவாமி யாரைப் பார்த்து யார் விலகச் சொல்கிருர்? விலகி நிற்க வேண்டியது யார்? என்ற எதிர் கேள்வி போட்டானும், அந்த அறிவு மேதை!—சிஷ்யர்கள் என்னும் அந்த சூன்ய பிரதேசங்கள், என்ன எதிர் கேள்வி போடுகிருனே என்று யோசித்தனராம்! அந்த அறிவுப் புயல் மீண்டும் சங்கராச்சாரியாரை நோக்கி அடித்ததாம்.

"ஸ்வாமி ஆத்மாவிலேதான் யாதொரு வேற்றுமையும் இல்லையே, உம்மிடத்திலுள்ள ஆத்மா அல்லவா என்னிடத்திலும் இருக்கிறது? ஒரே பிரம்மம் ஆத்மாவாக எங்கும் நிறைந்து நிற்க, "தீண்டத் தகுந்தவன், என்ற வேற்றுமை எங்கே கண்டதோ!" என்ற அவன் சிந்தனை ஆழமிக்க கேள்வி ஆச்சாரிய சுவாமிகளை ஆலோசனையில் ஆழ்த்திற்ரும். மீண்டும் மூளையற்ற சிஷ்ய கோடிகளின் பண்டையில் அறைவது போன்ற கேள்வியை கேட்டாருும் அச்சிந்தனைச் செல்வம். "உடம்பைக் கவனித்தாலும் என்ன ஸாரமான வேற்றுமையைக்காணமுடிகிறது? என்ற கேள்வி ஞானத்திலே ஆழ்ந்துபோன சங்கராச்சாரியார் இப்படி செப்பினராம்.

"ஆத்மாவையே உண்மையாகக் காண்கிறவன் பிராம்மணனயிருந்தாலும் சரி, பஞ்சமனயிருந்தாலும் சரி அவனே என் குரு, இது எனது நிச்சயமான கொள்கை, என சங்கரர் இப்படி உறுதி பூண்டாராம்—பி ஸ்ரீ. கூறுகிருர்! இந்த உறுதி—இந்த அத்வைத ஞானஊற்று, ஆச்சாரிய ஸ்வாமிகளின் உள்ளத்திலே ஊறித் தெளிந்த "மனீஷா பஞ்சக" என்ற ஐந்து சுலோகங்களாக வெளிப்பட்டதாம், இவர் கண்ட இந்த உண்மைப் பெருக்கே" அத்வைத வேதாந்தம் என்று பிரசித்தமாகச் சொல்லப்படுகிறதாம். 'ஆம்: 'உயிர்க்கலம் என்றே' என்ற சங்கர வேதாந்தம் ஒரு ஜாதிக்கோ, ஒரு மதத்திற்கோ, ஒரு நாட்டிற்கோ எப்படி உரியதாக இருக்க முடியும்? மனித குலத்திற்கே பொதுவான இந்த ஞான அமுதைக்கொண்டு, இன்னும் நாம் வகுப்பு வேற்றுமை, மதவேற்றுமை, நிறவேற்றுமை, முதலான பேதங்களைப் போக்கிக்கொண்டு உண்மையான அபேதவாதத்தில் உலகம் தழைக்கப் பணி செய்யலாம். இந்தியாவிற்கும் மனுஷ்ய குலத்திற்குமே இந்த ஆணி வேறிலிருந்து புத்துயிர் பெறக்கச் செய்யலாம்—பி. ஸ்ரீ. இப்படி நவில்கின்ருர்.

சங்கரர் கி. பி. எட்டாம் நூற்ருண்டில் அதாவது சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்பு ஆழ்வார் நாயன்மார் காலத்தை ஒட்டியவராம். அக்காலத்தில் தமிழ் நாட்டின் பகுதியாக இருந்ததாம் மலையாள நாடு. மலையாளமொழி தமிழின் கர்ப்பத்திலிருந்து இன்னும் பிறக்கவில்லையாம், அக்காலத்தில் மலையாள நாட்டில் தோன்றிய சங்கரர் திருஞானசம்பந்தரைத் "திராவிடசிசு" (தமிழ்க்குழந்தை) எனகுறிப்பிடுகிருர் "ஸௌந்தர்ய லஹரி" என்ற சமஸ்கிருத நூலிலே என்று பி. ஸ்ரீ. குறிப்பிட்டுப் பேசுகிருர்.

இந்த சங்கராச்சாரியாரை ஞான உலகம் ஆதிசங்கரர் என குறிப்பிடுகிறதாம் திருஞானசம்பந்தர், ஆதிசங்கரர் இளம் மேதைகளாம். இது நிற்க. ராமாநுசர் என்ற பக்தர் தமிழ் நாட்டில் தோன்றியவராம். அதாவது சுமார் 800 வருடங்களுக்கு முன் வாழ்ந்தவராம் 'உலகப் பணியில் ஆத்மாவையும் தியாகம் செய்து விடலாம்' என்ருராம். ஆதி சங்கரர் தீண்டாதவன் ஒருவனல் அத்வைத பாடம் கற்றுக் கொண்டதாக கதை வழங்குகிறதாம். நாம் இங்கு பக்தியையும் முக்தியையும், பற்றிய பழுத்த சிந்தனையில் ஆழ்வதல்ல; ஆதித் தமிழர்கள் ஞானியாகவும், அறிஞர்களாகவும் அஞ்சாநெஞ்சுடையோராகவும்திகழ்ந்திருக்கின்றனர். ஆரிய வலையில் சிக்காதவர்களும் இவர்களே! என்ற உண்மையை அறிகிருேம்.

ராமாநுசரைப் பற்றியும் ஓர் கதை வழக்கத்தில் உள்ளதாம். அது என்ன? அக்காலத்திலிருந்தே தலைவர்களுக்கும் சிஷ்யர்களுக்கும் கருத்து வேறுபாடு இருந்து வருவதாகக்காண்கிருேம். சங்கரருக்கு இருந்த உயிர்க்குலம் ஒன்றே என்ற சீரிய பண்பு அவரது சிஷ்ய கோடிகளுக்கு இல்லை. அதுபோல் உலக உத்தமர் காந்தி அவர்கள் "தீண்டாமை என் நாசிக்கு துர்நாற்றமாக வீசுகிறது. என்ருர் ஆனல் அவர்தம் சிஷ்யர்களுக்கோ தீண்டாமை மணக்கும் முல்லைக் காடாக வீசுகிறது. இதேபோன்று ராமாநுசரும் அவருடைய பெருவெள்ளமாம் சிஷ்யகோடிகள் புடைசூழ சென்று கொண்டிருக்கும்போது, "தாழ்த்தப்பட்ட" வகுப்பைச் சேர்ந்தபெண் ஒருத்தி எதிரே வந்தாளாம். கூட்டத்திலிருந்த சில சிஷ்யர்கள் 'ஒதுங்கிப் போ' என்று கூச்சலிட்டனராம். இக்காட்டுக் கூச்சலுக்கு அவ்வறிவுடைய பெண் சிரித்துக் கொண்டே பதில் கூறினளாம் உலகளந்தான் சந்நிதியில் ஒதுங்கிப் போக இடமெங்கே? என்று வெடி குண்டு வீசினளாம். சிஷ்ய கோடிகள் என்னும் மண்டூகங்கள் ஆகா! இதுவென்ன புதிர்கேள்வி? என திகைத்தனராம் மீண்டும் பேசினளாம் உலகம் முழுவதும் உலகளந்த பெருமானின் சந்நிதி தானே? அப்படியானல் நான் எங்கே எப்படி விலகிக்கொள்வது? இந்த உலகத்தையே விட்டு விலகிப் போவதுதான? என்று இடித்துக் கேட்டாளாம்.

உடனே ராமானுஜர் அவளை வணங்கி "இந்த வைஷ்ணவச் சின்னங்கள் உனக்கல்லவா தகும் என்று சொன்னதாக ஒரு வைஷ்ணவ குருபரம்பரைக் கதை வழங்குகிறதாம்! இப்பொழுது தெரிகிறதல்லவா? தமிழகத்தில் தலைநிமிர்ந்து நின்றவர்களும் ஆரிய சேற்றில் அமிழாதவர்களும் எதையும் ஏன்? எப்படி? என்று கேட்டவர்கள், பழந்தமிழர்களாகத்தான் இருந்திருக்கின்றனர் எனறு. அஞ்சாநெஞ்சன், திராவிடன் 6-5-55 ம் நாள் இதழில் கேள்வி-பதில் என்ற தலைப்பில் அளித்த பதிலில் நிரம்பியுள்ளஉண்மைக்கு, எனது நன்றி.

**—பொன்: இன்பச்சுழல்**

---

தலைமைக் கழகம்: அறிக்கை—16/55

**புதுவையைப் பொறுந்துக்**

## கழகச் சொற்பொழிவாளர்கள் கவனிக்க வேண்டியவை

புதுவை வட்டத்தைப் பொறுத்த வரையில், எந்தப் பொது நிகழ்ச்சியாக இருந்தாலும், புதுவை நகர தி.மு. கழகச் செயலாளர் தோழர் **ச. சிவப்பிரகாசம்** அவர்களது இசைவு இல்லாமல் கழகத் தோழர்களோ அல்லது கழகச் சொற்பொழிவாளர்களோ கலந்து கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

"புதுவையிலுள்ள 'திராவிடர் முன்னணி' மக்கள் முன்னணி' முதலிய அமைப்புகள், புதுவை தி, மு. கழகத்தின் உடன்பாடில்லாத புறம்பான அமைப்புகளாகும்," என்று புதுவை தி. மு. கழகம் அறிவிப்பதால் புதுவை தி. மு. கழகத்தின் இசைவு இல்லாமல் பொதுவாகக் கழகத் தோழர்களும், குறிப்பாக கழகச் சொற்பொழிவாளர்களும் அவற்றின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

**இரா. நெடுஞ்செழியன்,**
**பொதுச்செயலாளர் தி. மு. க.**

---

**தையற்கலை வல்லுநர்**

## தோழர் கே. பி. சுந்தரம்

**பம்பாய் பயணம்**

**தோழர் கே. பி. சுந்தரம் அவர்கள் தையற்கலைபற்றிய பல நுணுக்கங்களை அறிந்து கொள்ளவும், கமர்ஷியல் தையற்கலை கல்லூரியில் பயிற்சியளிக்கப்படும் முறைகளைக் கண்டறியவும் 18–6–55–ந் தேதி பம்பாய் செல்கிருர் அங்கு இரண்டுவார காலம் தங்கி வேறு பல முக்கிய நகர்களுக்கும் சென்று திரும்புவார்.**

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

# திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

18

### ஆந்திரம் :

திராவிடத்தின் மற்றப் பகுதிகளிலும் செய்யப்பட்டு வந்த பாதிரிமார்களின் தொண்டுகளைப்பற்றித் தெரிந்து கொள்வதும் அவசியமே முதன் முதலாக தெலுங்கு நாட்டில் கிருஸ்துவ மதப் பிரச்சாரம் செய்யத் துவங்கியவர் டாக்டர் ஸ்சூல்ட்ஸ் என்பாராகும். இவர் டேனிஷ் மிஷனைச் சேர்ந்தவரென்பதும், பைபிள வேதத்தைத் தெலுங்கு மொழியில் மொழி பெயர்த்தவர் என்பதும் முன்னர் கூறப்பட்டுள்ளது.

லண்டன் மிஷனரி சங்கத்தைச் சேர்ந்த க்ரேன், டெஸ்க்ராங்ஜஸ் இருவரும் 1805-ல் விசாகையில் கிருஸ்துவ ஸ்தாபனத்தை நிறுவினர்கள். தெலுங்கு மொழியையும், அதன் இலக்கியங்களையும் நன்குகற்று தேர்ச்சியடைந்தார்கள். ஆங்கிலப் படை வீரர்கட்கும் பொதுமக்கட்கும் பயன்படும்படியான சில பள்ளிக்கூடங்களைத் துவக்கினார்கள். இப்பள்ளிகளில் மத போதனைகளை நடத்தி வந்தார்கள்.

## பெண்களுக்கும் அனாதைகளுக்கும் பள்ளி விடுதிகள்

இவர்கட்குப் பிறகு கார்டன், டாசன், பிரிட்செட் என்போர்கள் தொடர்ந்து கிருஸ்தவத் தொண்டாற்றினர். இவர்கள கஞ்சம் நகரில் தங்கி பிரசாரம் செய்தார்கள். பழைய புதிய பைபிள ஏற்பாடுகளை தெலுங்கில் மொழி பெயர்த்து மக்களிடையே பரவச் செய்தனர். 1822-ல் கடப்பையில் ஒரு ஸ்தாபனம் நிறுவப்பட்டது 1836 வரையிலும் இவ்விரு ஸ்தாபனங்களும் மதப் பிரசாரம் செய்து வந்ததுடன் கல்வி முன்னேற்றத்திற்கான காரியங்களையும் செய்து வந்தன 1836-ல் பௌடன் என்பாரும், பீர் என்பாரும் நரசப்பூரில் மிஷன் சங்கம் ஒன்றை நிறுவினர்கள். இவ்விருவரும் தெலுங்கில் தேர்ச்சி பெற்று மக்களிடையே செல்வாக்குப் பெற்றனர். தெலுங்கு 'சக்கிலிய' வகுப்பினரிடையே இவர்களது புகழ் அதிகரித்தது சக்கிலிய வகுப்பினரை கிருஸ்துவர்களாக மாற்றி அவர்களது சமூக அந்தஸ்தை உயர்த்தினர். கோதாவரிக்கு அணை ஒன்று கட்டப்பட்டபோது, அங்கு கூலி வேலை செய்து வந்த மக்களிடையே கிருஸ்து மதப் பிரசாரம் செய்து பலரை கிருஸ்துவராக மாற்றியது குறிப்பிடக்கூடியதாகும்'

1839-ல் சிக்காகோலிலும், 1841-ல் மசூலிப்பட்டணத்திலும் லண்டன் மிஷன் சங்கங்கள் நிறுவப்பட்டன. 1840ல் நெல்லூரில் அமெரிக்கன் பாப்டிஸ்ட் மிஷன் ஒன்று நிறுவப்பட்டது. சர்ச் பள்ளிகள் நிறுவப்பட்டு கிருஸ்துவ மாணவர்கள் கல்விப் பயிற்சி கொடுக்கப்பட்டனர். 1845ல் ராஜமுந்திரியிலும் குண்டூரிலும் வடஜெர்மனி மிஷன் சங்கங்கள் நிறுவப்பட்டன. இம்மிஷனைச் சேர்ந்த யாவரும் கிருஸ்துவ மதப் பிரசாரத்தில் ஈடுபட்டவர்கள்தான். ஆனால் கல்வி பரப்புவதற்கான ஏற்பாடுகளையும் காரியங்களையும் திறம்படச் செய்தவர்களாகும். சர்ச்சுகள் நிறுவிய இடங்களிலெல்லாம் பள்ளிகளையும் அனாதை விடுதிகளையும் நிறுவினர். இலவச உணவு, உடை, இடம் கொடுத்து அனாதைகளை ஆதரித்தனர். பெரும் நகரங்களில் உயர்தரப் பள்ளிகளையும் ஆங்கிலப் பள்ளிகளையும் நிறுவினர்

'தென்னிந்தியாவில் கிருத்துவ சங்கங்கள்' எனும் நூலின் ஆசிரியரான திரு. ஜோசப் முல்லன்ஸ் என்பாரின் கூற்றுப்படி 1854-ல் தெலுங்கு நாட்டில் 23 தெலுங்கு மொழிப் பள்ளிக்கூடங்கள் இருந்தன. அவைகளில் 600 சிறுவர்களும் 80 சிறுமிகளும் கல்வி பயின்று வந்தனர், இலவச உணவுப் பள்ளிகளில் 43 மாணவர்களும் 110 மாணவிகளும் கல்விப் பயிற்சிக் கொடுக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தனர். விசாகப்பட்டணத்தில் தெலுங்கு அச்சுக்கூடம் ஒன்று இயங்கி வந்ததும் தெலுங்கு புத்தகங்களும் பாடபுத்தகங்களும் அச்சியற்றப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

### கன்னடம் :

1810-ல் லண்டன் மிஷனைச் சேர்ந்த ஹான்ட்ஸ் என்பாரும் ரீவ் என்பாரும் பெல்லாரியில் முதன் முதல் தமது மிஷனை நிறுவினர் இவர்கள் பட்டாளத்தினரின் அனாதைச் சிறுவர்களுக்கென ஒரு பள்ளியைத் துவக்கியும், 1813-ல் ஒரு ஆங்கிலப் பள்ளி நிறுவி அதில் கன்னட தெலுங்கு சிறுவர்களைச் சேர்த்துக் கல்விப் புகட்டியும், இலவச உணவுப் பள்ளிகள் சில ஏற்படுத்தியும் தொண்டாற்றினர் அச்சுக்கூடம் ஒன்று நிறுவி கன்னட மொழி இலக்கிய வளர்ச்சிக்கு துணை புரிந்தனர்.

1820ல் பெங்களூரில் ஒரு மிஷன் நிறுவப்பட்டு தொண்டாற்றப்பட்டு வந்தது. 1836ல் இங்கு காரட் என்பார்

## பாதிரிகளின் திராவிட மொழி - இலக்கியப் பணிகள்

ஒரு ஆங்கிலப் பள்ளியையும் ஒரு அச்சுக் கூடத்தையும் நிறுவினர். கன்னட மொழிப்பள்ளிகள் சிலவும் இவரால் துவக்கப்பட்டன. இங்கு வெஸ்லியன் மிஷன் சங்கத்தினர் தமது ஸ்தாபனத்தை நிறுவி தொண்டாற்றி வந்தனர்.

இந்த ஸ்தாபனங்களைச் சேர்ந்த பாதிரிகளின் கன்னட மொழி அகராதி ஒன்று தொகுத்ததும், அச்சு யந்திரங்கள் நிறுவி கன்னட இலக்கியங்களையும் கன்னட மொழியில் கிருஸ்துவ இலக்கியங்களையும் வெளியிட்டதும் பள்ளிக்கூடங்களுக்கான பாட புத்தகங்கள் அச்சியற்றி உதவியதும் குறிப்பிடத்தக்கனவாகும். கன்னட மொழி இலக்கணம் ஒன்று கன்னட மொழியிலும் ஆங்கில மொழியிலும் இயற்றப்பட்டதும குறிப்பிடத் தக்கதாகும். பெல்லாரியிலும் பெங்களூரிலும் இவர்களால் நிறுவப்பட்ட அச்சுக்கூடங்கள் அரும்பெரும் காரியங்களைச் சாதித்து வந்தன.

### தென்கன்னடம்-துளு மலையாளம்

துளு மலையாள தென்கன்னடப் பகுதியில் 'பேசல் எவாங்கலிக்கல் சங்கம்' தொண்டாற்றி வந்தது. இது ஜெர்மனி நாட்டுப் பாதிரிகள் நிரம்பிய சங்கமாகும். 1833-ம் ஆண்டில் கிழக்கிந்திய கம்பெனியார் கொடுத்த அனுமதியின் பயனாக இந்த ஜெர்மன் பேசல் சங்கத்தினர் திராவிட நாட்டின் மேலக் கடற்கரையை வந்தடைந்தனர்.

1834-ல் மங்களூரிலும் 1836ல் தார்வாரிலும் 1839ல தலைச்சேரியிலும் 1839ல் ஹூப்ளியிலும் 1840ல் கோழிக்கூட்டிலும் படகராவிலும் தம மிஷன ஸ்தாபனங்களை நிறுவிக் கொண்டனர். பின்ன பெந்தகரியிலும் மாவசமுத்திரத்திலும் பெல்லாரியிலும் பெல்காமிலும் தம் ஸ்தாபனங்களை நிறுவிக் கொண்டனர். இச்சங்கத்தார் பாலசமுத்திரத்தில் ஒரு பெரும் கிருஸ்துவக் காலனி ஏற்படுத்தி ஆந்த வசித்துவந்த லிங்காயத்துக்களின் காலக்ஞானிகளை கிருஸ்துவமதத்தில் சேர்த்தது குறிப்பிடத்தக்கதாகும்,

மங்களூரில் இயங்கி வந்த இவர்களது சங்கம் துளுவர்களான பில்லவர்களையும் பந்தர்களையும் கிருஸ்துவ மதத்தில் சேர்த்தனர். முல்கி என்ற கிராமத்தில் தங்கள் மதப்பிரசார ஸ்தாபனத்தை நிறுவி வியக்கத்தக்க வேலைகள் செய்து வந்தனர். இவர்களுடைய பிரசாரத்தினால் மங்களூர் பார்ப்பனர்களில் பலர் ஆங்கிலக் கல்வி பெற்று கிருஸ்துவர்களாக மாறி அரசாங்க உத்தியோகங்களைப் பெற்றனர். மலபாரில் இச்சங்கத்தினர் செய்த வேலைகளில் நாயாடி எனும் கீழ் வகுப்பினரை முன்னேற்றமடையச் செய்தது குறிப்பிடத்தக்கதாகும். கள்ளிக்கோட்டை கலெக்டராக இருந்த மிஸ்டர் கானலி என்பார் இவர்களிடம் பரிவு கொண்டார். குகைகளிலும் மரங்களிலும் மிருக வாழ்க்கை நடத்திவந்த இந்நாயாடி வகுப்பு மக்களை மனித சமுதாயத்தில் ஒருவராகச் செய்ய நினைத்தார் அவர்களுக்கென தனித்தனி வீடுகள் கட்டிக் கொடுத்து வாழ்ந்து வரும்படிச் செய்தார். விவசாயம் செய்யும் முறையைக் கற்பித்து விவசாயத் தொழிலில் ஈடுபடும்படிச் செய்தார். ஆனால் இந்த காரியத்தைத் தொடர்ந்து அரசாங்கம் செய்யத் தயங்கியதால் பேசல் மிஷனரிகளிடம் ஒப்படைத்தார். இப்பாதிரிகள் அவர்களை மனிதர்களென்ற நிலைக்கு அருகதையாக்கி முன்னேறச் செய்தனர். ஆனால் இந்த நாயாடிகளோ தம் குணத்தை விடாது நாயாடி நாடோடிகளாகவே வாழ விரும்பினர்!

1845 வரையில் இம்மிஷனரிகள் அதிகரித்தே வந்தனர். இருபது ஆண்டு காலத்திற்குள் இவர்கள் மிகப் பலராக பரவி தீவிரமான கிருஸ்துவ மதப் பிரச்சாரம் செய்து வந்தனர் ஒவ்வொரு இடத்திலும் சர்ச்சும் மிஷன் கட்டிடமும் பள்ளிக்கூடமும் நிறுவி வந்தனர். இரு முக்கிய நகரங்களில் அச்சு யந்திரங்களும் தொழிற் கல்வி பள்ளிக்கூடங்களும் நிறுவினர் ஆங்கிலக் கல்வி தேவைப்பட்ட இடங்களில் ஆங்கிலப் பள்ளிக்கூடங்களும் இவர்களால் நிறுவப்பட்டன ஜோசப் முல்லன்ஸ் அவர்களின் விவரப்படி 1854-ம் ஆண்டில் 50க்கு மேற்பட்ட கன்னட மலையாள மொழிப் பள்ளிக்கூடங்களும், மூன்று இலவச உணவுப் பள்ளிகளும் நடைபெற்று வந்தன. இலவச உணவுப் பள்ளிகளில் அறுபது மாணவர்கள் இருந்தனர், பெண்கள் இலவச உணவுப் பள்ளிகளில் கூட 150 பெண்கள் கல்வி பெற்று வந்தனர். ஆங்கிலப் பள்ளிகளில் 96 மாணவர் பயின்று வந்தனர். தலைச்சேரியிலும் மங்களூரிலும் கைத்தொழிற் கல்விக்கூடங்கள நடத்தப்பட்டு வந்தன, இப்பள்ளிக்கூடங்களில் விவசாயம், நெசவு முதலிய தொழில்களில் பயிற்சி கொடுக்கப்பட்டன மங்களூர் தொழிற் கல்விக்கூடத்தில் கடிகாரம் செய்வது இசைப் பெட்டிகள் செய்வது எலக்ட்ரோப்ளேட்டிங் துப்பட்டி கைகுட்டைகள் நெய்வது புத்தகங்கள் பைண்ட் செய்வது அச்சு யந்திரத்தினால் அச்சு பதிப்பது ஆகிய தொழில்களில் பயிற்சிக் கொடுக்கப்பட்டு வந்தன. மங்களூரில் இருந்த அச்சு யந்திரத்தில் கன்னட துளு புத்தகங்கள் அச்சியற்றப்பட்டன. தலைச்சேரியிலிருந்த அச்சு யந்திரம் மலையாள புத்தகங்களை அச்சியற்றி வந்தது, பள்ளிக்கூட ஆசிரியர்கட்கு பயிற்சிக் கொடுப்பதற்கென ஒரு ஆசிரியர் பயிற்சி பள்ளியும் துவக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த பேசல் மிஷன் சங்கத்தினர் புரிந்துள்ள நன்மைகளைப் பற்றி ஜோசப் முல்லன்ஸ் தமது நூலில் கூறியுள்ளதை இவண் குறிப்பது பொருத்தமேயாகும். 'மற்ற கிருஸ்துவ சங்கத்தினரைப் போலவே ஜெர்மன் பேசல் கிருஸ்துவ சங்கத்தினரும் பள்ளிக்கூடங்கள் நிறுவுவதில் அக்கரை காட்டிவந்தனர், இவர்கள் மூன்று வகையான பள்ளிகள் நிறுவியுள்ளனர். கிருஸ்துவ மதத்தினர்க்கென போர்டிங் பள்ளிகளை நடத்தி வருகின்றனர், இவைகளில் சிறுவர் சிறுமியர் இருபாலரும் சேர்த்துக் கொள்ளப்பட்டு பயிற்சி கொடுக்கப்படுகின்றனர். இப்பள்ளிகளில் ஆரம்பக்கல்வி மட்டுமே புகட்டப்பட்டு வருகின்றன.

கன்னடச் சிறுவர்கட்கெனத் தாய் மொழிப் பள்ளிகள் பல ஊர்களில் நிறுவப்பட்டு நடைபெற்று வருகின்றன. இவைகளின் எண்ணிக்கை தற்போது கிட்டத்தட்ட ஐம்பதுக்குக் குறையாது. ஆனால் இப்பள்ளிகள் நிலையாக நீடித்து நடப்பதில்லை. இந்நாட்டுச் "சிறுவர்களும் சிறுமிகளும் ஒழுங்கான முறையில் பள்ளிக்கு வருவதில்லை—

12-ம் பக்கம்

## 'அணுகுண்டுகள் வெடிக்குமாம்!'

மதுரையில் நடிகவேள் ராதாவின் ராமாயண நாடகம் நடந்தால் அணுகுண்டுகள் வெடிக்கும் என "அணுகுண்டு பேர்வழி" பொதுக்கூட்டமொன்றில் கர்ஜித்தாராம்!

அமெரிக்க கண்டுபிடிப்பான அணுகுண்டுகளைக் கடலில் எறிந்துவிட வேண்டுமென்று "போர்" அடிக்கும் ஆச்சாரியார் அவர்கள் இந்த உள்ளூர் 'அணுகுண்டு'களின் தவறான போக்கினைக் கண்டித்துப் பேசி திருத்த முயன்றாலும் அர்த்தமுண்டல்லவா என்கிறார் நமது நண்பரொருவர்!

உண்மைதான், ஆச்சாரியாரின் வெத்துவேட்டுப் பேச்சுக்கும், மதுரை 'அணுகுண்டு'களின் வாய்ச் சவடாலுக்கும் பொருத்தமாகக் கூடயிருக்கும்.

# எகிப்திய புகழ் நகர் அலெக்ஸாண்டிரியா

கௌதமன்

குறிப்பு:- உலகிலே பல நூல்நிலையங்கள் இருந்தன—இருக்கின்றன அவற்றிலே மிகப் பெரியதும், முதன்மையானதும், பழமையானதுமான நூல்நிலையம், எகிப்து நாட்டிலுள்ள அலெக்ஸாண்டிரியா நூல்நிலையம் தான்! கிரேக்க மாவீரன் அலெக்ஸாண்டர் கி. மு 332—ல் எகிப்து நாட்டின் மீது படையெடுத்து வந்தபோது, 'அலெக்ஸாண்டிரியா' என்னும் இந் நகரை நிறுவினான்! அவனுக்குப் பிறகு ஆளும் பொறுப்பேற்ற அவன் தளபதி தாலமி அதில் சிறந்ததொரு நூல்நிலையம் கண்டான். இந்நூல்நிலையத்தைப் பற்றியும்—இந்நகர் உண்டாகி வளர்ந்தவிதம் பற்றியும்—அங்கு நடந்த ஆராய்ச்சி பற்றியும்—நண்பர் 'கௌதமன்' இக்கட்டுரையில் தீட்டியுள்ளார். மாணவ நண்பர்கள் இதனை நன்கு பயன்படுத்திக் கொள்வார்களாக!

(ஆசிரியர்)

நிறுவும்: கி. மு. 332

நிறுவியவன் :

கிரேக்க மாவீரன் அலெக்ஸாண்டர்

*

'இதோ, இந்தத் தீவுக் கூட்டங்களுக்கு என்ன பெயர் ஹெபேஸ்டியன்?'

'பரோஸ்' என்று பெயர்!'

அதோ தெரிகிறதே அந்த ஏரி...!

'அதுதான் 'மரியோடிஸ்' ஏரி!'

'ஆகா! எவ்வளவு பிரமாதமாக இருக்கிறது, ஹெபேஸ்டியன், இந்த இயற்கைக் காட்சிகள்! அழகான நைல் நதி ஒருபுறம்—அதை வாரி அணைத்துக் கொள்ளும் கடல், மற்றோர்புறம்—கடல் போலக் காட்சிதரும் ஏரி பிரிதோர்புறம்—எதிரிலோ சிறு சிறுதீவுக் கூட்டங்கள், கடலிலே மிதந்து கொண்டு! என்ன அருமை ஹெபேஸ்டியன்! எகிப்தின் மாட்சியே மாட்சி!'

'ஆமாம் மன்னவா! எகிப்தியர்கள் பெருமிதம் கொள்ளவேண்டும் இவைகளையெல்லாம் தங்களுடையது என்று சொல்லிக்கொள்ள...!'

'என்ன ஹெபேஸ்டியன் அப்படிச் சொல்லுகிறாய்...! கிரேக்கர்கள் பெருமிதம் கொள்ள வேண்டும்—பூரிக்க வேண்டும் என்று சொல்லு!'

'மன்னிக்க வேண்டும் அரசே! நாம் வெற்றி கொண்டதை மறந்தே போய் விட்டேன்...!

'அது கிடக்கட்டும்! இந்த இடத்தை நாம் எப்படியும் பயன்படுத்தியாக வேண்டுமே...! நமது வெற்றிச் சின்னமாக—நமது கலாச்சாரத்தின் புகலிடமாக—இதை ஆக்கினால்தான் எனதுள்ளம்—இல்லை இல்லை நம்முள்ளம் மகிழ்வுறும்! என்ன சொல்கிறாய் ஹெபேஸ்டியன்...!

'சொல்வதென்ன இருக்கிறதரசே! மன்னன் அலெக்ஸாண்டர் கட்டளையிட்டால் இந்த 'கிரேக்கம்' செய்து முடிக்கத்தானே காத்துக்கிடக்கிறது!'

'அப்படியானால்...!!!

'அப்படியானாலென்ன, வேண்டாமரசே! ஆகையால் இங்கு ஒரு 'கடல் நகர்' நிர்மாணமாகிவிடும்! அதுவும் தங்கள் பெயராலேயே...! அழகான ஏத்தென்ஸ்—ஒப்பற்ற காரிந்த் — இவைகளுக்கும் மேலாக விளங்குமிந்த 'அலெக்ஸாண்டிரியா'! கவலையே வேண்டாமரசே!'

இப்படி உருவானதுதான் அலெக்ஸாண்டிரியா! உலகில் அன்று முதல் இன்றுவரை, முக்கியத்துவ மிழக்காத பெருநகராக—நல்லதொரு பழம்நகராக—விளங்குவதுதான் அலெக்ஸாண்டிரியா!

கி. மு. 332—ல் உருவானது கி. பி. 1954—லும் புகழ் குன்றாத எழில் மண்டலமாக இருக்கிறது! உலகில் இத்தகைய முறையில் பழம் பெருமையுடனும் — புதுப்பொலிவுடனும் விளங்குகின்ற நகர்கள் வெகுவெகுச் சிலவேயாகும்!

கிரேக்க நாட்டிலே ஏத்தென்ஸும், காரிந்தும் ஒரு காலத்திலே புகழ் வாய்ந்த நகரங்களாகக் காட்சி யளித்தன! தக்ஷசிலமும், பாடலிபுத்திரமும் இந்தியாவின் புகழ் நகர்கள்—ஒருகாலத்தில்! பூம்புகாரும், முசிறியும், மதுரையும், காஞ்சியும், தமிழகத்தின் இதய நகர்கள்—முன்பொரு சமயம்! ஆனால் இன்று...!

இன்றும் அவைகளிருக்கத்தான் செய்கின்றன. ஆனால், சிதைந்து போன பெருமையோடு — மங்கிய ஒளியோடு! ஆனால் அலெக்ஸாண்டிரியா அப்படியல்ல; இன்றும் அதற்கு முக்கியத்துவம் இருக்கத்தான் செய்கிறது! அந்த அழகான கடல்நகர், இன்றும் ஓர் சிறந்த துறைமுகம்—எகிப்து நாட்டிற்கு!

இத்தகைய அருமை நகரை நிறுவிய பெருமை கிரேக்க மாவீரன் அலெக்ஸாண்டரைத்தான் சாரும்! இளமையால் பொங்கி, இறுமாப்பால் வளர்ந்து பேராசையால் மன்னனாகி, படைபலத்தால் பார்முழுவதையும் கட்டியாளக் கிளம்பிய அந்த மாஸிடோனியக் காவலன், தனது பெரும் பாரசீகப் படையெழுச்சியின் போது பல நாடுகளை வெற்றி கொண்டுவிட்டு, பல மண்டலாதிபதிகளின் மணிமுடிகளை — அல்ல அல்ல—மணிமுடி தரித்த தலைகளை—மண்ணிலே உருளச் செய்துவிட்டு இறுதியாக கி மு. 334—ல் 'டையர்' என்ற வீரம் செறிந்த நல்நாட்டை—பாறைக் கூட்டங்களிடையே கடலிலே மிதந்து கொண்டிருந்த அந்த மறவர் நாட்டை—கடலிலே பாலமமைத்து, முற்றுகையிட்டு, பலிபீடத்திலே அதனைச் சாய்த்துவிட்டு, அதன் வீரர்களை ரத்த வெள்ளத்திலே தவழ்ந்தோடச் செய்துவிட்டு, மீண்டும் தனது படையெழுச்சியைத் தொடர்ந்து போகின்ற நோக்கிலே, பாலஸ்தீனத்திற்குள்ளே புகுந்து அங்கேயிருந்த யூதர்களால், வெற்றி வீரனென புகழ் மாலை சூட்டி வரவேற்கப்பட்டு மீண்டும் அங்கிருந்து கிளம்பிப் போகின்ற நேரத்திலே காஜா என்ற பாலஸ்தீன நகரை வீழ்த்திவிட்டு பழம் பெருமை வாய்ந்த எகிப்து நாட்டின் எல்லைகளை மிதித்து ஆங்கே பாரசீகர்களின் அடிமைப் பிடியினின்றும் தங்களை விடுவித்த 'விடுதலை வீரன்' என்று எகிப்தியர்களால் (கி. மு. 332 நவம்பரில்) மலர் மாலைகள் சூட்டி வரவேற்கப்பட்டு, அங்கிருந்து அழகான நைல்நதியின் போக்கையும் இயற்கைக் காட்சிகளையும் கண்டு ரசித்துவரத் தன் அருமை நண்பர்களுடன் மத்திய தரைக் கடல்வரை, நதியில் மிதந்து சென்று நைல் நதியின் முகத்துவாரத்தின் அருமைச் சூழ்நிலைகளால் பெரிதும் கவரப்பட்டு அலெக்ஸாண்டரது நினைப்பிலே தோன்றி, நெஞ்சிலே உருவாகி அவன் செயல் வீரர்களால் நிர்மாணிக்கப்பட்டதுதான் அந்த அருமை நகர்! அவன் பெயராலேயே இன்றும் அழைக்கப்படுகிறது 'அலெக்ஸாண்டிரியா'வென்று!

ஆரம்பத்திலே குறிப்பிட்டிருந்ததைப் போல, கனோபஸ் என்ற நகரிலிருந்தபடியே அலெக்ஸாண்டரால் திட்டம் (Plan) தீட்டப்பட்டு தன் கண் முன்னே தெரிந்த மரியோடிஸ் (Mareotis) ஏரிக்கும், மத்தியதரைக் கடலுள் மிதந்த சிறுசிறு 'பரோஸ்' தீவுகளுக்குமிடையேயுள்ள பிரதேசத்தையெல்லாம் ஒன்றாக இணைத்து முதலில் கற்பனை ரீதியாக சிருஷ்டிக்கப்பட்டதுதான் அலெக்ஸாண்டிரியா! பிறகு நிஜநகராகவே உருவாகிவிட்டது—உருவாக்கப்பட்டுவிட்டது.

அதுமுதல் கிரேக்க நாகரீகத்தையும் எகிப்திய நாகரீகத்தையும் ஒன்றாகப் பிணைக்கும் கலாச்சாரப் பணியை அது வெகுநாள்வரை தொடர்ந்து செய்து செய்து வந்திருக்கிறது. அதோடு உலகோர் வியக்கும் வண்ணம் பல நூறு புராதனச் சின்னங்களுடன், நாகரீகத்தின் உறைவிடமாய் —அறிவுத்துறையின் பல்கலைக் கழகமாய்—பழம் பெருமையின் நிலைக்களமாய்—இன்றும் பல் வேறு நூல் நிலையங்களையும் பொருட்காட்சிசாலைகளையும்கூட தன்னகத்தே கொண்ட புகழ் நகராய் விளங்குகிறது அலெக்சாண்டிரியா, என்றால் அந்த பொன்னனைப்புகழ் அதை நிறுவிய மாஸிடோனிய மாவீரன் அலெக்ஸாண்டரைத்தான் சாரும்!

அதுமட்டுமல்ல உலகின் கீழ்க்கோடி நாடுகளுடன்—மேற்கத்திய உறவின் முறையை விஸ்தரிக்க வணிகத் தொடர்பை அதிகரிக்க—அரசியல் ஆதிக்கத்தை பெருக்கிக் கொள்ள—பயனுள்ளதாகுமென்ற நுண்ணறிவால்தான் அலெக்சாண்டர் இந்நகரை நிறுவினான் அக்காலத்தில் என்றால் உள்ளபடியே அவன் எதிர்கால அறிவு போற்றப்படவேண்டிய ஒன்றுதான்!

கிரேக்க கலாசாரத்தை எகிப்தில் மட்டுமல்ல; இங்கிருந்து எற்கெங்கோ உள்ள கண்காணு கீழ்த்திசை நாடுகளிலெல்லாம் பரப்ப வேண்டுமென்ற உள்ளக்கிடக்கையோடு உருவாக்கப்பட்ட அந்நகர், அவன் நினைத்த எண்ணங்களை மிக அருமையாகப் பிரதிபலித்ததென்றாலும் அவனே இருந்து அதை ரசித்து மகிழமட்டும் வாய்ப்பளிக்கவில்லை! அந்த ஒரு நல்வாய்ப்பில்லாமலேயே—அந்நகரை மீண்டும் மிதிக்காமலேயே பொன்றிவிட்டான் அந்த மகிபன்!

ஆம்! பாரசீகத்தை வீழ்த்தி; இந்தியாவின் எல்லைப்புற நகர்களை உள்நாட்டு விபீஷணர்கள் சிலரின் துணை கொண்டு வெற்றி கொண்டு மீண்டும் யானைப் படைகளை கண்டஞ்சிய அவன் வீரர்கள் தொடர்ந்து போரிட மறுத்ததால் தாயகம் திரும்புகின்ற வேளையிலே பாபிலோனிய நகரிலே கொடிய விஷஜுரத்தால் தாக்கப்பட்டு கி மு. 323—ம் ஆண்டு ஜூன் மாதம் 23—ந்தேதி வெற்றி கொண்ட நாடுகளை கட்டியாளும் வாய்ப்பொன்றுமே இல்லாமல் பறித்த உரிமைகளையெல்லாம் தனிக் காட்டிலே அலையவிட்டுத் தனது இளமை குன்றாத 33 வயதிலே, தானும் பொன்றிவிட்டான் அலெக்சாண்டர்!

அவன் வீழ்ந்த பிறகு அவனில் அருமை நாடு சிதறிவிட்டது! டான்யூப் நதிமுதல்—சிந்து நதிவரை பரந்து கிடந்த அவனது இன்பபுரிகள் உரிமை பூசலுக்கும்—ஆளும் போட்டிக்குமிடையே சிக்கி வேதனையடைந்து கொண்டிருந்தது. நல்ல வேளையாக எகிப்தை யாளும் பொறுப்பு அலெக்சாண்டரின் நண்பனும்—நல்லதோர் தளபதியும்—அலெக்ஸாண்டரைப் போலவே அரிஸ்டாட்டலின் சீடனுமான தாலமி (Ptolemy I) என்பவனுக்குக் கிடைத்தது. தாலமி எகிப்தின் மன்னனாதும் அலெக்ஸாண்டரின் எண்ணங்களை மட்டுமல்ல; தன் குருவான அரிஸ்டாட்டலின் கருத்தோவியங்களையும் பரவச் செய்ய வேண்டுமென்று புதிய ஆர்வத்தால் நிறைந்து காணப்பட்டான்! எனவே தனது இளம் மன்னன் நிறுவிச் சென்ற அலெக்சாண்டிரியாவை தன் தலைநகராக்கிக் கொண்டதோடு அதை நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் முன்வந்தான்!

கலைக்காகவும்—நாகரீக வளர்ச்சிக்காகவும்—விஞ்ஞான முன்னேற்றத்திற்காகவும் அறிவுத்துறையின் உயர்விற்காகவும்—தத்துவ ஆராய்ச்சியின் மேம்பாட்டிற்காகவும் தொண்டு செய்யக் கிளம்பினான் தாலமி! அதற்காக அலெக்ஸாண்டிரியாவில் சிலபல நிரந்தர ஏற்பாடுகளையும் செய்தான்! அலெக்ஸாண்டரோ தன் கருத்துக்களையும் தனது விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவுகளையும் தொகுத்தறிவிக்கும் வண்ணம் தன் குரு அரிஸ்டாட்டலுக்கு ஒரு நிதியை மட்டும்தான் அளித்திருந்தான்! ஆனால் அவன் நண்பனோ இந்தப் பணியைச் செய்ய பெரியதோர் 'பல்பொருட் காட்சிசாலை' (Museum) ஒன்றையே அலெக்ஸாண்டிரியாவில் நிறுவி விட்டான்! இதன் காரணமாகத்தான் 'அலெக்ஸாண்டிரியா' உயர் வாழ்வு மண்டலமானது!

'பல்பொருட் காட்சிசாலை' என்ற

## 'ஆச்சாரியாருக்கு யோகம்!'

தோழர்களே! தலைப்பைக் கண்டவுடனே தவறான கற்பனையில் இறங்கி மங்களம் பாடி விடாதீர்கள்.

ஆச்சாரியார் அவர்கள் பிறந்த ஊரின் பெயர் ஹோசூர். அந்தஊருக்கு இந்திய சர்க்கார் அமைச்சர் அஜீத் பிரசாத் சென்ற வார இறுதியில் வருகை தந்தாராம்.

ஆச்சாரியாரின் சேவையைப் பாராட்டும் வகையில் ஹோசூரில் ஒரு கோயில் கட்ட வேண்டும் என அவ்வூர் பஞ்சாயத்து போர்டார் அமைச்சரிடம் வேண்டினராம்!

ஆச்சாரியாருக்கு அடிக்கும் யோகத்தைப் பார்த்தீர்களா? மனிதப் பருவத்திலிருந்து ஒரே மூச்சாக கடவுள் பதவிக்கு உயர்த்தப்படப் போகிறார்! இப்படியல்லவோ இருக்க வேண்டும் "அதிர்ஷ்டம்!"

ஆனால் இவ்வித அதிர்ஷ்டத்தில் சில ஆபத்தும் இருக்கிறதாக நமது நண்பரொருவர் கூறுகிறார்.

குரங்கிலிருந்து மனிதன் தோன்றினானென்பது அறிஞர்களின் ஆராய்ச்சியல்லவா. அதற்கு அடுத்த வளர்ச்சி ஆண்டவனாக மாறுவது. இதற்குப் பிறகு வளர்ச்சி வேறு கிடையாதாம்! சக்கரம் சுழல்வதைப்போல மீண்டும் ஆண்டவன்கள் குரங்குகளாகப் பிறந்து விடுவார்களாம்!

எனவே ஆச்சாரியார் அவர்கள் கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து மாநில அமைச்சர் பதவிக்கு பின்னோக்கிச் சென்றதைப்போல, ஆண்டவன் நிலையிலிருந்து குரங்கு பருவத்துக்குக் குதிக்காதபடியிருக்க முடியுமா என்பது சிந்திக்க வேண்டிய பிரச்னையாகும் என்கிறார் அந்த நண்பர்.

# விஞ்ஞான மேதைகளின் பரம்பரைக்கு எடுத்துக் காட்டு அலெக்ஸாண்டிரியா!

பேராலே நிறுவப்பட்டது பிற்காலத்தில் பெரியதோர் நூல்நிலையமும், அறிவாராய்ச்சி சாலையும் கொண்ட ஒரு பல்கலைக் கழகமாகவே மாறிவிட்டது. அந்த அளவுக்குத் தாலமியிடமிருந்தும் அவன் மகன் 'தாலமி பிலெடெல்பஸ்' (Ptolemy Philadelphus) என்ற இரண்டாம் தாலமியிடமிருந்தும் ஆதரவு கிடைத்தது!

கிரேக்க நாட்டிலே—குறிப்பாக ஏத்தென்ஸ் நகரிலே சாக்ரடீஸின் கொள்கைகளை எடுத்துச் சொல்லவும் தன் சொந்த அரசியல் தத்துவங்களையும் உலகின் முன்னாலே வைக்கவும் தனது சமுதாய அமைப்புமுறைகளைத் தெளிவுபடுத்தவும் புதியதோர் அறிவாராய்ச்சி நிகழ்த்தவும் சாக்ரடீஸின் பிரதமசீடன் பிளேட்டோவால் ஏத்தேனிய கடற்கரைப் பகுதியிலே நிறுவப்பட்ட 'லைசியம்' என்ற கழகம் (கி மு 380—கி.பி. 529) போல இங்கும் அறிவாராய்ச்சி நடைபெற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தின் எதிரொலிதான் தாலமிக்களின் ஆதரவுக்குக் காரணம்!

எனவே தாலமிக்களின் காலத்தில், அலெக்ஸாண்டிரியா புதுப்பொலிவும், ஒளியும் கொள்ளலாயிற்று தாலமியின் அரண்மனையை ஒட்டி இப்போது அறிவுச்சாலை திறக்கப்பட்டுவிட்டது! உலகின் பல்வேறு விநோத நிகழ்ச்சிகளையும்—பொருள்களையும், இங்கே கண்டும் — சேமித்தும் வைப்பதற்கென எழுந்த அந்த கண்காட்சிச் சாலை, இப்போது அறிவுத்துறைக்கு ஆக்கம் தேடியது முதல், மதத்தத்துவங்களையும், சமுதாய கோட்பாடுகளையும், விஞ்ஞானத்தின் உயர்வையும் தொகுத்தறிவிக்கும் அருமையான நூல்கள் வரையிலுமுள்ள—எல்லா நூல்களையும் ஒருங்கே திரட்டி வைத்துக் கொள்ளவும், ஆர்வமுடன் வெளிவந்தது! அதன் பயனாக எகிப்தில் மட்டுமல்லாமல், அதையொட்டிய மேல்நாடுகளிலும், கீழ்த்திசை நாடுகளிலும், தீட்டப்பெறும் அத்தனை நூல்களின் ஓரிரண்டு பிரதிகள், எப்படியும் அங்கே கொண்டுவந்து வைக்கப்பட்டன! இதற்கான செலவினங்களைத் தாலமியின் அரசாங்கம் மிகமகிழ்வோடு அள்ளித்தந்தது! காகிதமும், அச்சு யந்திரமும் இல்லாதிருந்த அந்த நேரத்திலும் நைல் நதியோரத்திலே கிடைத்த ஒருவகை மரப்பட்டைகளைப் பயன்படுத்தி ஆதிகால மக்கள் நூல் எழுதி வைத்துள்ளனரென்றால், அவர்களின் ஆர்வம் எந்த அளவுக்கு இருந்திருக்க வேண்டுமென்று எண்ணிப் பார்க்க வேண்டும்! அந்த அறிவுச் சாலையில் வாங்கப்பட முடியாத நூல்களின் பிரதிகளையெல்லாம் கையால் எழுதி வைப்பதற்கென்றே பல எழுத்தாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனராம்! இப்படியாக அங்கே மொத்தம் 4 லட்சம் நூல்கள் அந்த பொருட்காட்சி சாலையிலும்—அதிலும் இடமில்லாத காரணத்தால், அதையொட்டிய 'சரபீஸ்' (Temple of Serapis) ஆலயத்தில் சுமார் 3 லட்சம் புத்தகங்களுமாக மொத்தத்தில் 7 லட்சம் புத்தகங்களைக் கொண்ட உலகின் முதல் நூல் நிலையமாக வெகு சீக்கிரத்திலேயே ஆகிவிட்டதாம் அலெக்ஸாண்டிரியா! அதுமட்டுமல்ல, இவ்வளவு நூல்களையும், தன்னகத்தே கொண்ட பிறகும் அதை உலகிற்குப் பயன்படுத்தாமலிருக்க விரும்பவில்லை அலெக்ஸாண்டிரியாவால்! எனவே மன்னன் கட்டளைப்படி எகிப்தின் தலைநகரிலே இனி அறிவாராய்ச்சியும் தொடங்கியது! அலெக்ஸாண்டரின் குரு அரிஸ்டாட்டலின் கருத்துரைகளையும் கோட்பாடுகளையும், மையமாகக் கொண்டு அது தன் பணியையும் துவக்கிவிட்டது

இதன் பயனாய் கலை, காவியம், ஓவியம், தத்துவம், விஞ்ஞானம் முதலிய பல்வேறுபட்ட பொருள்கள் அங்கே நன்கு ஆராயப்பட்டு பிறருக்கு முறையாக போதிக்கப்பட்டும் வந்தது!

இன்றைய தினம் உலகம் போற்றும் தத்துவ—விஞ்ஞான மேதைகளின்பரம்பரையே அலெக்ஸாண்டிரியாவின் பல்கலைக் கழகத்திலேதான் தோன்றியது முதன்முதலிலென்றாலும், மிகையல்ல அது! அந்த அளவுக்கு பல்வேறுபட்ட கருத்துடைய விற்பன்னர்களும் அங்கே வந்து குழுமி பெண்களை நன்கு ஆராய்ந்து, தெளிந்து, அறிவுபெற்று அதை வெளியிடவும் முன்வந்திருக்கிறார்கள்! கீழ்நாடுகளிலிருந்தும் கிரேக்கமண்டலங்களிலிருந்தும், பல நல்லறிஞர்கள் அந்த பல்கலைக் கழக நகருக்குச் சென்று புகழும் விஞ்ஞான மேதை ஆர்க்கிமெடீஸ் (Archimedes) ஸைரக்யூஸ் என்ற பெருநகரிலே இருந்து வந்து இங்கேதான் விஞ்ஞானம் பயின்று, தெளிந்து புதிய தத்துவங்களையும் கண்டறிந்து வெளியிட்டானும்! பூமியின் சுற்றளவைக் கண்டறிந்த யூக்ளிட் (Euclid)டும் ஹெரட்டோஸ்தென்னஸும் (Erotosthenes) கணிதத்தில் கோணங்களின் வகைகளை கண்டறிவித்த அப்போலோனியஸ்ஸும் (Apolionius) வானத்திலே திகழும் நட்சத்திரங்களின் இருப்பிடங்களையும், பெயர்களையும்கண்டறிந்த முறையாக வெளியிட்டுக் காட்டிய ஹிப்பார்க்கஸ்ஸும் (Hipparchus) முதன் முதல் நீராவி யந்திரம் அமைக்க வழிவகை கண்டறிந்த ஹீரோவும் (Hero) அலெக்ஸாண்டிரியாவின் அறிவுக் கழகத்தின் மாணவர்களாயிருந்து உயர்வு பெற்றவர்கள்தான் என்றால், அலெக்ஸாண்டிரியா எத்தகைய சிறப்பு வாய்ந்த பெருநகராக இருக்க வேண்டுமென்று எண்ணிப் பாருங்கள்.

இவற்றையெல்லாம்விட, அலெக்ஸாண்டிரியாவைப் பொன்னகராகச் செய்த மன்னன் தாலமியே சிறந்ததொரு விஞ்ஞானியாகவும், ஒரு நல்ல சரித்திராசிரியனாகவும் இருந்திருக்கிறான். சூரியனுக்கும்—சந்திரனுக்கும்—பூமிக்கும்—இடையே உள்ள இடைவெளியைக் கண்டறியும் ஆராய்ச்சியிலே அவன் ஈடுபட்டிருந்திருக்கிறான். அதோடு அலெக்ஸாண்டரின் படையெழுச்சியின் நிகழ்ச்சிகளையும் அவன் ஒன்றையும் விடாது தொகுத்து எழுதியிருக்கிறான். துரதிருஷ்ட வசமாக இந்த சரிதத்தின் பிரதி பிற்காலத்தில் உலகினருக்கு கிடைக்காமற் போனது மிகவும் வருந்தத்தக்க விஷயந்தான்!

எனவே அலெக்ஸாண்டரால் எழுப்பப்பட்ட அந்த அருமையான கடல் நகர், உலகிலே அதுவரை என்றுமே கண்டிராத—ஆய்ந்திராத அவ்வளவு விஷயங்களையும் ஆய்ந்து தெளிந்து விஞ்ஞான ரீதியான முடிவுகளையும்—புதிய கண்டு பிடிப்புகளையும் வெளியிட்டிருக்கிறது! கி.பி. பதினேழாம் நூற்றாண்டிற்கும் கி.மு. இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கும் இடையேயுள்ள சுமார் ஆயிரம் ஆண்டு இடைவெளியிலும் கூட இத்தகைய முறையில் விஞ்ஞானம் தத்துவம் போன்ற துறைகளில் ஆராய்ச்சி நிகழ்த்தப்படவேயில்லை என்றால் அலெக்ஸாண்டிரியாவின் அறிவுச்சாலை எவ்வளவு புகழ் வாய்ந்ததென்று நீங்களே எண்ணிப் பாருங்கள்,

மேலே குறிப்பிட்ட விஞ்ஞானிகள் தத்துவ ஞானிகள் வானமண்டல ஆராய்ச்சிக்காரர்கள் ஆகியோர்கள் தனித்தனியே கண்டறிந்த சேதிகளையும் கண்டுபிடிப்புகளையும் பற்றி நாம் இன்னும்கூடக் கொஞ்சம் விரிவாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்ளலாம் தற்போதல்ல; பிறிதோர் சமயம்!

ஆகவே அலெக்ஸாண்டிரியாவின் அறிவாராய்ச்சி தொடர்ந்து நடைபெறவில்லை. ஆரம்பித்த இரண்டு மூன்று நூற்றாண்டுகள் வரையில்தான் ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடைபெற்றிருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால் இரண்டு தாலமிக்களின் காலத்தில் தான் அவைகளின் புகழ் உச்சநிலையை அடைந்திருக்கிறது! பிறகு அவைகளின் ஒளி மங்கி தேய்ந்து இறுதியில் நூல் நிலையம் மட்டுமே பாதுகாத்து வைக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இதற்கு பல காரணங்கள் இருந்ததென்றாலும் முக்கியமானதும் முதன்மையானதுமான காரணம் முதலிரண்டு தாலமிகளுக்குப் பிறகு இவைகளுக்குப் போதிய ஆதரவு அரச அவையிலே யிருந்து கிடைக்கவில்லையென்பதுதான்! மேலும் பிற்கால தாலமிக்களெல்லாம் எகிடிய மயமாக்கப்பட்டவர்கள்! கிரேக்க கலையையும்—கலாசாரத்தையும் நாகரீகத்தையும் மதச்சார்பற்ற விஞ்ஞானத்தையும் பற்றி அவர்கள் விரும்பவில்லை, அவைகளைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. எனவேதான் அலெக்ஸாண்டிரியாவின் அறிவாராய்ச்சிக் கழகம் வீழ்ந்துவிட்டது! ஆனாலும் நூல்நிலையம் மட்டும் மிக பத்திரமாகவே பாதுகாக்கப்பட்டு வந்தது.

இருந்தாலும் இந்த நூல்நிலையத்திற்குக்கூட இரண்டு முறைகள் நாசகாரர்களால் ஆபத்துக்கள் விளைவிக்கப்பட்டிருப்பதாக வரலாற்று ஏடுகளிலேயிருந்து நாம் மிகமிக வேதனையோடு தெரிந்து கொள்கிறோம்!

வடநாட்டு மன்னன் ஹர்ஷவர்த்தனன் காலத்தில் (கி. பி. 629-ல்) இந்தியாவிற்கு வந்த சீன யாத்திரிகன் 'ஹூவான்-சாங்' மாணவனாயிருந்து தத்துவம் முதலிய பலகலைகளைக் கற்று இறுதியில் தான் கற்ற பல்கலைக்கழகத்திலேயே துணைவேந்தராகவுமிருந்து பாடலிபுரத்தின் புகழ் பெற்ற பல்கலைக் கழகமாம 'நலந்தா'வைத் தீயிட்டுக் கொளுத்தியதுபோல அலெக்ஸாண்டிரியா நூல்நிலையத்திற்கும் அழிவுக்காரர்களால் இருமுறை தீ வைக்கப்பட்டிருக்கிறது! இருந்தாலும் நல்லவேளையாக அலெக்ஸாண்டிரியா சில பகுதிகள் நஷ்டத்துடன் தப்பிப் பிழைத்துவிட்டது. ஆனால் நலந்தாதான் அடியோடு சாம்பலாகிவிட்டது!

ரோமானிய மணிசூடா மன்னனும் சரித்திரங்களின் பக்கங்களைக் கொடுமைக் காட்சிகளாலும்—வெறிச்செயல்களாலும் நிரப்பியவனும் சொல்லின் செல்வன் 'மார்க்—ஆண்டனி'யால் மாத்திரம் மாவீரன் புகழ வாய்ந்த மகிபன்—என்றெல்லாம் தன் சொல்வன்மையால் தொழுதேற்றப்பட்டோனும், கைதேர்ந்த ரோம்நாட்டின் சர்வாதிகாரியுமான ஜூலியஸ் சீஸர் கி. மு. 47-ல் எகிப்து நாட்டின் மீது படையெடுத்தபோது அலெக்ஸாண்டிரியாவின் அறிவுக் கழகத்தின் ஒரு நூல்நிலையப் பகுதியையே தீயிட்டுக்கொளுத்தியிருக்கிறான். அந்த மகானுபாவனின் (!) நாசவேலையைத் திரையிட்டு மறைக்கவும் அழிந்த புகழ் வாய்ந்த பொக்கிஷங்களின் நஷ்டத்தை ஈடுசெய்யவும் பிற்காலத்தில் சீஸரின் நண்பரான 'ஆண்டனி பெர்காமஸ்' என்ற சிறு நாட்டு மன்னன் ஹெப்யூன்ஸ் என்பவனால் சேகரிக்கப்பட்டதும் அலெக்ஸாண்டிரியா நூல்நிலையத்திற்கு ஒரு காலத்தில் போட்டியாக ஸ்தாபிக்கப்பட்டதுமான — நூல் நிலையத்தின் அவ்வளவு புத்தகங்களையும், அலெக்ஸாண்டிரியாவிற்குப் பரிசாக ராணி கிளியோபாட்ராவின் கையில் ஒப்படைத்திருக்கிறான்!

பிறிதோர் சமயம் காலிப்ஹோமர் காலத்தில் அவன் தளபதி அம்ரான் என்பவனால் எகிப்து நாடு வெற்றி கொள்ளப்பட்டபோது, அலெக்ஸாண்டிரியாவின் நூல்நிலையம்—அது மதசார்பற்ற நூல்களைப் பெற்றிருக்கிறது என்ற காரணங் காட்டி மற்றொரு பகுதியும் அழிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

எது எங்ஙனமாயினும் அலெக்ஸாண்டிரியாவின் நூல் நிலையம் முழுதும் அழிக்கப்படவில்லை! எண்ணற்ற புத்தகங்கள்—புகழ்பெற்ற இலக்கியங்கள்—இன்றும் இருக்கத்தான் செய்கின்றன. பதினெட்டாம் பெருக்கிற்கும்—செல்லரித்த கொடுஞ் செயலுக்கும்—தீயிட்ட ஜோதி விழாவிற்கும் (!) தப்பிப்பிழைத்து, நம்மிடையே களிநடம் புரியும் அருமைத் தமிழ் இலக்கியங்களைப்போல, அங்கேயும் நெஞ்சை அள்ளும் இலக்கியங்கள்—பொன்னனை நல்லேடுகள்—இன்றும் இருக்கத்தான் செய்கின்றன! கால வேறுபாட்டால் அவைகள் உருவம் மாறியும், பொருள்கள் மாற்றப்பட்டும், நோக்கங்கள் சிதைக்கப்பட்டும், உண்மை எண்ணங்கள் மறைக்கப்பட்டும், இன்று கிடைக்கும் தமிழகத்தின் இலக்கியங்களைப்போலக் காட்சி தருமென்றாலும், அவற்றின் உண்மையை அறியும் பொறுமையை பொறுப்பையும் நம்மிடையே விட்டு—எதிர்காலத்தின் அறிவுப்பொக்கிஷமாக அவைகள் இருக்கத்தான் செய்கின்றன!

உலகமுழுவதும் பரவியிருக்கும் இத்தகைய எண்ணற்ற அறிவுக் கழகங்களையும், நூல்நிலையங்களையும் தேடிக் கண்டெடுத்து, அவைகளைப் பயனும்—பொலிவுமுள்ளதாகச் செய்யும் பெரும் பொறுப்பு உலகில் எதிர்காலத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது! மகத்தான பெருமூச்சுச் சுழலிலே தோய்ந்துறும் இப்பணியை அந்த எதிர்காலம் என்றுதான் செய்து வெற்றி கொள்ளுமோ...... மகிழ்வுறுமோ......நாமறியோம்!

## 'திராவிடன்' சந்தா விவரம்

உள்நாடு

| | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டு சந்தா ... | ரூ. | 8 | 0 | 0 |
| ஆறுமாதம் ... | ரூ. | 4 | 0 | 0 |
| தனிப்பிரதி ... | ரூ. | 0 | 3 | 0 |

வெளிநாடு

| | | | | |
|---|---|---|---|---|
| ஆண்டு சந்தா ... | ரூ. | 9 | 0 | 0 |
| ஆறு மாதம் .. | ரூ. | 4 | 8 | 0 |
| தனிப்பிரதி ... | ரூ. | 0 | 3 | 6 |

## கைத்தறி ஆடையையே அணியுங்கள்


## கால் ஆணிக்கு மேல் பூசும் மருந்து

குதிக்காலிலும், பாதத்திலும், பள்ளம் பள்ளமாயும், சதை வளர்ந்தும் ஆணியைப்போல் ஏற்பட்டு நடக்கும்போது பாதமானது தரையில் வைக்கமுடியாமலும் கல் பட்டால் துடிதுடிப்பதுமாய் ஏற்படக்கூடிய வியாதியை ஆச்சரியகரமாய் கண்டிக்கக் கூடிய மருந்து இதுவே.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூ 2-8-0 தபால் சார்ஜ் இனம்

ஸ்ரீ முத்து மெடிகல் ஹால்
வியாசர்பாடி. சென்னை-12

# ஓவியக் கலையிலும் தென்னாடு - வடநாடு வேறுபாடு

## 19

நாம் ஏற்கனவே குறிப்பிட்ட கலைகளில் நிலநூல், வானநூல், மருத்து (வைத்திய) நூல் இவைகள் எல்லா மக்களுக்கும் பொதுவானவை. ஆயினும், அவைகள் தட்ப வெப்ப நிலைகளுக்கேற்ப சில பல மாறுதல்களுடன் வளரும் தன்மை வாய்ந்தவை.

எனவே, ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும், தட்ப வெப்ப நிலைகளிலும், எவ்வளவிலாவது வித்தியாசம் இருக்கும் என்று அறிஞர் கூறுவர்.

ஒவ்வொரு கலையும் அதனதன் தாய் மொழி வளர்ச்சிக்கேற்ப வளர்ச்சியடைவது இயற்கை.

எந்த மொழியும் ஆட்சி மொழியாகாத போது வளர முடியாது.

அப்படி எந்த மொழி ஆட்சிமொழியாகாமல் அடுப்பங்கரை மொழியாகத் தள்ளப்படுகிறதோ, அந்த மொழியும், அதன் கலைகளும் வளர்ச்சி குன்றுவது மட்டுமல்ல—அழிந்து போவதும் உண்டு.

ஒரு சமூகத்தாரின் கலைகள் அழியுமானால், அது கலைகளின் அழிவுமட்டுமல்ல—சமூகத்தின் அழிவென்றே அறிஞர் கூறுவர்.

அதுமட்டுமா? ஒவ்வொரு கலையிலும் பல்வேறு தொழில் முறைகள் வளர்ந்திருக்கும். கலை அழியும்போது அதனைச் சார்ந்த தொழில் முறைகளும் அழிந்து, வேலையில்லாக் கொடுமை மலிந்து, பொருளாதாரச் சீர்குலைவும் ஏற்படும்.

அத்தகைய சீரழிவைத் தடுக்க அந்நிய ஆட்சியால் முடியுமா? மக்களை அயல்நாடு சென்று கூலிவேலை செய்யும்படி 'பாஸ்போர்ட்' வழங்குவதைத் தவிர அந்நிய ஆட்சியால் எதுவும் செய்ய இயலாது.

இந்த சீரழிவு நிலைமைதான் கடந்த ஒரு நூறு ஆண்டு காலமாக திராவிடத்தில் வளர்ந்தோங்கி வருகிறது.

கவனிப்பாரற்ற கலைகள் — இறந்துபட்ட தொழில்கள் ஏராளம், ஏராளம். அத்தனையிலும், அந்நியருடைய ஆதிக்கமும் வருவாய் வழிகளும் ஏற்பட்டிருக்கின்றன,

அந்நிய மருத்துவக் கலை போற்றப்பட்டிருப்பதால், ஆண்டொன்றுக்கு அயல்நாடு செல்லும் செல்வம் எவ்வளவு? நவீன சாய மருந்துகளுக்காகப் போகும் பணம் எவ்வளவு? அந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தோர் கதி என்ன?

நிலநூலும், வானநூலும், ஆரியர் கையில் சிக்கி, உருமாறி வடமொழிக் கலைகளாகப் பெயர் பெற்றன.

தமிழில், நிலநூல் இருந்த தடமே மறைந்துவிட்டது. வானநூல் இருந்தமைக்கு சான்றுகள் மட்டும் கிடைக்கின்றன.

தமிழனுடைய வானநூல், ஆரியரிடம் போன பின்பு கணிதம், சாதகம், பிரஸ்னம் என்று மூன்று பிரிவுகளாகி, பொய்யும், புலையாட்டும் கொண்டதாகி, அறிவைக் கொல்லும் நஞ்சாக வளர்ந்திருக்கிறது! ஆரியருடைய ஆதி ஏடான 'ரிக்' வேதத்தில் வானநூல் பற்றிய குறிப்புகள் எதுவும் இல்லை.

தமிழ்இசையும் இதேகதியை அடைந்து கொண்டிருந்த போது, செட்டி நாட்டு இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் போன்ற அறிவும், திருவும் படைத்தோரால் சிறிது உயிரூட்டம் பெற்றது.

ஆயினும், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்கிற ஏழி சைக்குரிய தமிழ்ப் பெயர்களையும், அவற்றின் குறியீடாக விளங்கும் எழுத்துக்களான ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, என்பனவும் தமிழிசைவாணர் பலர் அறியார்! அதற்குப் பதிலாக, சத்தம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சம், தைபதம், நிஷாதம் என்கிற வடமொழிப் பெயர்களையும், அவற்றின் குறியீட்டு எழுத்துக்களான, ச, ரி, க, ம, ப, த, நி, என்பவைகளையே கூறுவர்! இவற்றில் ஊகாரமும், ஏகாரமும் எப்படி எழுப்புவார்களோ அறிகிலோம்!

இராவணீயம், பெருநாரை, பெருங்குருகு முதலான தமிழ் இசை நூல்கள் இறந்துபட்டன—கொல்லப்பட்டன.

இன்றைய சினிமா உலகில் வளரும் இசை, தமிழையும், தமிழ் நாட்டையும், கேலி செய்வதாய் அமைந்திருக்கிறது. 12 மாத்திரைக்கு மேல் எந்த எழுத்தும் ஒலிக்கக்கூடாதென்று தமிழிசை வல்லார் கூறுவர். இன்றைய சினிமா இசையில் இந்த வரம்பெல்லாம் மீறப்பட்டு வடமொழி இசையைப் பின்பற்றி வரைகடந்து செல்கிறது!

தற்கால வடஇந்தியாவில் போற்றப்படும் இசை, அவர்களுக்குச் சொந்தச் சரக்கல்ல! பூர்வீக இசை இலக்கண வரம்புகள் எதிலும் கட்டுப்பட்டதல்ல! எதிலும் அமையாத 'தான்தோன்றித்தனம்' வாய்ந்ததாகும்'

ஆரியம், கிரேக்கம், பாரசீகம் ஆகிய பலதிறப்பட்ட இசையுடன், திராவிட—தமிழிசை முறையைக் கலந்து, சமயத்திற்கேற்றபடி தாள வரம்பின்றி இசைத்துப் பாடுவதைத்தான் வடவர்கள் தங்களுடைய 'இசை' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

திராவிடத்தின் தலையாய மொழியான தமிழ், இயல், இசை, நாடகம் என்ற முப்பெரும் பிரிவுகளைக் கொண்டதாகும் என்பதை எவரும் அறிவர்.

இவ்வாறு இசையும், நாடகமும் தமிழுடன் இணைந்து நிற்பதால், அவை, மொழியுடன் இரண்டறக் கலந்து முத்தமிழ் என்கிற சிறப்புப் பெயர் தந்தன. இந்தக் காரணத்தாலேயே, தமிழுக்கு இசையும், நாடகமும் புதுமையல்ல கூடப்பிறந்தவை என்று தமிழன் அறைகூவுகிறான்.

வடவர்களுக்கு கி. பி. முதலாம் நூற்றாண்டுக்கு முன்னால், நாடகம் என்றால் என்ன என்றே தெரியாது!

கி. பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த வடமொழிக் கவிஞன் அஸ்வகோஷ் என்பவன்தான், கிரேக்கர்களின் நாடகக்கலையைப் பின்பற்றி முதன்முதலில் உரையிடையிட்ட கவிதை நடையில் 'ஊர்வசி வியோகம்' என்கிற நாடக நூலை எழுதினான் என்று திரு. இராகுல சாங்கிருத்தியாயன் என்பவர், அவருடைய 'வால்காவிலிருந்து கங்கை வரை' எனனும் நூலில் கூறி இருக்கிறா.

தமிழர்களின் பழம்பெரும் நாடகநூல்களில் அழியாமல்—உயிருடன் கிடைத்திருப்பது சிலப்பதிகாரம் ஒன்றேயாகும்,

தமிழிசை, எவ்வளவுதான் மங்கிக் கிடந்தாலும் அது, மீண்டும் தழையத்தக்க மூலாதாரங்களாக, தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம் முதலியவற்றைப் பெற்றிருக்கிறது.

இனி, சிற்பங்களையும், ஓவியங்களையும் எடுத்துக் கொள்வோம்.

தென்னிந்திய சிற்பங்களுக்கும், வட இந்திய சிற்பங்களுக்கும் இடையில் மிகப் பெரிய வித்தியாசங்கள் இருக்கின்றன. அவற்றை விளக்குவது எழுத்தால் இயலாத காரியம்.

சிற்பங்களெல்லாம் பெரிதும் புராண இதிகாசக் கதைகளையே சித்தரித்துக் கொண்டு, கோவில்களில் தஞ்சம் பெற்றிருக்கின்றன. ஆயினும், அவைகள் தெற்கே தமிழ்ப் பண்பாட்டிலும், வடக்கே வடவர் பண்பாட்டிலும், இயற்கையாகவே உருவாகியுள்ளன. சிற்பக் களஞ்சியங்களாகக் காட்சியளிக்கிற தென்னாட்டுக் கோவில்களையும், காரைச் சுவர்க் குவியல்களாக விளங்குகிற வடநாட்டுக் கோவில்களையும் நேரில் காண்பவர்களுக்கு நாம் கூறுகிற உண்மை விளங்கும்.

ஓவியக் கலையிலும் தென்னிந்தியாவும் வடஇந்தியாவும் மிக வேறுபாடு கொண்டவைகளே!

அஜந்தா ஓவியங்களைப் பார்த்த ஒருவன், சித்தன்னவாசல் ஓவியங்களையும் கண்டால் இரண்டும் ஒரே தன்மை வாய்ந்தவை என்று கூறமாட்டான்.

வடநாட்டு அஜந்தா ஓவியம், செயற்கை அமைதி கொண்ட வடவர் பாணியிலும், சித்தன்னவாசல் ஓவியம்—தென்னாட்டிலிருப்பதால்—இயற்கை அமைதி கொண்ட தமிழர் பாணியிலும் இருக்கின்றன.

### எம். எஸ். ஆர். அவர்களுக்கு வாசகரின் பாராட்டு.

●

அன்புடைய ஆசிரியரவர்களுக்கு வணக்கம், திராவிடன் இதழ் எட்டு ஆண்டுகளாக திராவிட சமுதாயத்திற்கும், திராவிட நாட்டின் சுதந்திரத்திற்கும் செய்து வரும் தொண்டு மகத்தானது என்பதை நான் மட்டுமல்ல நாடே கூறும், அரசியல் கருத்துக்களையும், திராவிட இனத்தின் பெருமையையும் திராவிடன் இதழில் படித்துப் புத்துணர்ச்சி பெற்றவன் நான் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். திராவிடர்களின் அன்புக்கும் பெருமைக்கும் உரியதான திராவிடன் இதழில் கவிஞர் எம். எஸ். ராமசாமி அவர்கள் தீட்டி வரும் 'நாடு என்றால் என்ன?' தொடர் கட்டுரை திராவிடன் தொண்டுக்கு பிரத்யேகச் சிறப்பாக விளங்குகிறது. திராவிட இனத்தின் உயரிய பண்பாட்டை கலாச்சாரத்தை இது வரை யாரும் எடுத்துக் காட்டாத அளவுக்கு ஆராய்ச்சித் துறையில் புகுந்து வாரந்தோறும் எடுத்துக் காட்டும் வரலாற்று உண்மைகள் தாழ்ந்த திராவிடத்தை திராவிட சமுதாயத்தைத் தலை நிமிரச் செய்கிறது. தமிழகத்தில் மறைந்து கிடக்கும் முற்போக்கு எழுத்தாளர்களை மக்கள் மன்றத்திற்கு அழைத்து வந்து அறிமுகப் படுத்தும் திராவிடன் ஆசிரியருக்கு எனது மனப்பூர்வமான வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன், அது போலவே வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் இயற்கையாயுள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டிவரும் கவிஞர். எம். எஸ். ராமசாமி அவர்களுக்கும் எனது மனப் பூர்வமான பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—எம். கே. மூர்த்தி, திருச்சி

# தென்னாட்டு - வடநாட்டுப் பெண்களிடையே ஆபரணங்களிலும் வேறுபாடுண்டு.

**நாடு என்றால் என்ன...தொடர்ச்சி**

இரவிவர்மனால் தீட்டப்பட்ட ஓவியங்கள் தமிழ்த்தன்மை வாய்ந்தவைதான். ஆனால், ஆரியப் புராணேதிகாச—விளம்பரங்களாக அமைந்திருக்கின்றன.

வடநாட்டில் தீட்டப்பட்ட ஓவியங்கள் இரவிவர்மன் ஓவியங்களிலிருந்து பெரிதும் வேறுபட்டவை. இரண்டுக்கும் ஒரே ஒரு ஒற்றுமை உண்டு. அதுதான், இரண்டும் ஆரியக் கோட்பாடுகளைக் கொண்டிருப்பது!

தற்போது தமிழ்நாட்டில்—திராவிடத்தில் வீடுகளையும், பொது இடங்களையும், அணிசெய்து நிற்கும் ஓவியங்கள் எல்லாமே ஆரியர்களின் புராண இதிகாசக் கடவுளர்களும், அக்கடவுளர்களின் பஞ்சமாபாதகத் திருவிளையாடல்களும் உருவாக்கப்பட்டவைதான். ஆயினும், அவைகள் தமிழ்ப் பண்பாட்டின்படி அமைந்திருக்கின்றன.

தமிழனுடைய ஓவியங்கள், இவ்வாறு அவனுக்கு சிறிதும் பயன்படாமல்—ஆரியமயமாக இருப்பது பெரிதும் மானக்கேடாகும்.

சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு, திருக்குறள் முதலிய தமிழ்ப் பெருநூல்களில் காவிய வடிவமாக இடம்பெற்ற அரசர்கள், புலவர்கள், புரவலர்கள், வீரர்கள், வீராங்கனைகள், செயற்கரிய செய்த பெரியோர்கள் பலா உள்ளனர். அவர்களைப் பற்றி—அந்தந்தக் காவியங்களின் கருத்துக்கிணங்க காதல், வீரம், அச்சம், இகழ்ச்சி, வியப்பு, அருள், அவலம், சினம், நகை முதலான ஒன்பதுவகைச் சுவைமிளிர ஆயிரக் கணக்கான வண்ண ஓவியங்கள் தீட்டலாம்.

அதனால் தமிழனின் பழம் பெருமை ஓங்கும். தமிழிலுள்ள பல்வேறு நீதி நெறிகள் நிலைபெற்று பரவும். தமிழாகளின் மறுமலர்ச்சிக்கு உதவியாகவும், புதுமையாகவும் இந்த நன்முயற்சி செய்வோருக்கு நல்லூதியம் தருவதாயும் அமையும்.

இதில், தமிழ் நாட்டு ஓவியர்களும், லித்தோ பிரிண்டர்களும் ஆண்டுதோறும் ஓவியங்களுடன் காலண்டர் வெளியிட்டு விளம்பரம் தேடும் வாணிகர்களும் கருத்துச் செலுத்த வேண்டுமென்பது நமது ஆசை,

இதுநிற்க, வடநாட்டு ஓவியர்கள் தங்ளுடைய ஓவியங்களில், ஆண் உருவானாலும் பெண்ணுருவானாலும் சரி, நெடிய உடலும், தேய்ந்த இடையும், அரைத் தூக்கத்தில் இருப்பது போன்ற கண்களும் அமைக்கிறார்கள்!

இந்த செயற்கை உருவைத் தமிழர்கள் விரும்பமாட்டார்கள். எனவே தமிழ் ஓவியர்கள் உருவங்களை இயற்கை எழில் ததும்ப அமைக்கிறார்கள்.

இந்த இருவேறு நிலைமை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அஜந்தா குகை ஓவியங்களை வடநாட்டில் அமைத்தபோதும் சித்தன்னவாசல் குகை ஓவியங்களை தென்னாட்டில் அமைத்த போதும் ஓவிய எழில் வகை இருவேறு விதங்களாகவே வளர்ந்திருக்கின்றன.

இனி வடஇந்திய தென்னிந்திய அணிகலன்கள் பற்றிச் சிறிது கூறுவோம்.

வடநாட்டு ஆண்களுக்கும் தென்னாட்டு ஆண்களுக்கும் அணிகலன்களில் வேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பெண்களுக்கிடையில் வித்தியாசங்கள் இருக்கின்றன.

நான் ஒருசமயம் சென்னை சௌகார் பேட்டை வழியாக வந்து கொண்டிருந்தேன். சென்னை சௌகார்பேட்டை என்றால் வடஇந்தியரின் கோட்டை என்றல்லவா பொருள்! அதில் நான் வரும்போது என் பின்னால் கண கண—கண கண என்று ஒருவித சத்தம் வந்து கொண்டிருந்தது. மதுரை மக்கள் அவர்களுடைய மாடுகளுக்கும், கன்றுகளுக்கும் பித்தளைத் தகட்டினால் ஒரு விதமான மணி செய்து கட்டி இருப்பார்கள், அந்த மந்தைகள் தெருக்களில் வரும்போது மணிகளின் அசைவால் இனிமையற்ற ஒருவித ஓசை கேட்கும். அந்த ஓசையை அடுத்து, இந்த சௌகார்பேட்டை ஓசையும் இருந்ததால் மாடுகள் வருவதாக நினைத்துத் திரும்பிப் பார்த்தேன்—திகைப்படைந்தேன்! வந்தது மந்தை அல்ல—வட இந்திய மாதா!

வெள்ளியினால் மிகப் பெரிதாகச் செய்யப்பட்ட குழல் தண்டைகள்! அந்தத் தண்டைகளோடு இன்னும் என்னென்னவோ வெள்ளி வளையங்கள்! இவைகள் எல்லாம் சேர்ந்து காலில் கிடந்து கூச்சலிடுகின்றன!

இதுமட்டுமா? முழங்கைகளில் பெரிய பெரிய தங்கக் கடகங்கள்! அதனுள்ளேயும் பரல்! தோளுக்கும் முழங்கைகளுக்கும் இடையில் பெரிய பெரிய தங்க வளையங்கள் இத்தியாதி அணிகலன்கள் பூண்ட பெண்கள் சுமார் 10 பேர்! அத்தனை பேருடைய ஆபரண ஓசைதான் மாட்டு மந்தைச்சத்தம்!

"நமது பெண்களில் சிலர் அணியும் சதங்கையின் ஒலிபோல கலீர் கலீர் என்று கேட்டிருக்கலாம்! அதையே இவன் மிகைப் படுத்துகிறான். என்று யாரும் கருத வேண்டாம்!

உண்மையில் அது விரும்பத்தக்க கலீர் கலீர் சத்தமே அல்ல—கண, கண என்கிற மந்தைச் சத்தமேதான்.

இதுபோலவே நான் ஆமதாபாத்தில் ஒரு தெருவில் வரும்போது சில பெண்களை கண்டேன். அவர்களில் சிலர் சிறிய மாதுளம் பழம் போன்ற நிறமும் பருமனும் கொண்ட புல்லாக்கு அணிந்திருந்தார்கள். பின்னும் சிலர் முன்கை மணிக்கட்டிலிருந்து தோள் வரையிலும் தொடர்ச்சியாக ⅓ அங்குல கனமும், ½ அங்குல அகலமும் வெண்ணிறத் தந்தம்போல நிறமும் உள்ள வளையல்களை அணிந்திருந்தார்கள்! அது ஒரு போர்வீரன் தோளுக்கும் கைக்கும் கவசம் பூட்டியிருப்பது போல் காட்சியளித்தது. அந்த வளையல்கள் கைஒன்றுக்கு சுமார் 50 இருக்கலாம். இவைகளெல்லாம் வடஇந்திய நகை அலங்காரங்கள்!

இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், வடஇந்தியப் பெண்களில் ஒருகூட்டத்தாருக்கும் இன்னொரு கூட்டத்தாருக்கும் மிக வித்தியாசமான ஆபரணங்கள் காணப்படுகின்றன. காரணம்; எதுவென்று நமக்குத் தோன்றவில்லை. அது, ஒவ்வோர் சாதியாரின் ஆபரணக் கோலங்களாக இருக்கலாமென ஊகிக்கிறோம்.

தென்னாட்டுப் பெண்கள் இத்தனை சத்தமும் முரட்டு உருவமும் கொண்ட நகைகளை அணிய விரும்பமாட்டார்கள்—வெட்கப்படுவார்கள்!

தெலுங்குச் சகோதரிகள்சிலர், முரட்டு உருவங்கொண்ட நகைகளை அணிகிறார்கள். ஆனால் அவைகள் கூச்சல் போடுவதாகத் தெரியவில்லை.

குடியிருக்கும் வீடுகளும்கூட தென்னிந்தியாவுக்கும் வடஇந்தியாவுக்கும் வேற்றுமைப்படுகின்றன! தற்கால கட்டிடங்கள்—சுகாதார முறைப்படி காற்றோட்டமும், வெளிச்சமும் உள்ள கட்டிடங்கள் வடஇந்தியாவில் இருக்கின்றன. ஆனால் அவைகளின் ஜன்னல்களை யெல்லாம் ஏருக்குமாறுக் மூடி, இருள் அடைந்து புழுங்க வைப்பதுதான் வடஇந்தியரின் பழக்கமாகக் காணப்படுகிறது.

பழமையான கட்டிடங்களில், காற்றோட்டமும், வெளிச்சமும் மிகமிகக்குறைவு இருளும், புழுக்கமும், அவர்களுக்கு இன்பம் தருவன போலும்!

நாம் இதுவரை கூறிதந்த இலக்கியங்கள், கலைகள் ஆகியவற்றில் மிகப்பெரிய வேற்றுமைகள் இருப்பதைக் கண்டிருக்கலாம். ஒவ்வொரு சமூக மக்களும் அவரவருடைய இலக்கியங்களை — கலைகளைக் கொண்டே தேசிய உணர்ச்சிகளைப் பெறுகிறார்கள். தேசிய உணர்ச்சிகளின் நிலைக்களனாக விளங்குபவை. இலக்கியங்களும் கலைகளுமாகும்.

இதனை இவ்வளவோடு நிறுத்திவிட்டு பொருளாதார நிலைகுறித்து ஆராய்வோம்.

—(தொடரும்)

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற

வெண் சங்கு

சியக்காய்த் தூள்

எங்கும் கிடைக்கும்

மணத்தில் மிகுந்த

செல்வம் ராணி

ஊதுபத்திகளை

உபயோகியுங்கள்

தயாரிப்பவர் :

வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி

3037—38 டபீர் குளம்ரோடு

தஞ்சாவூர்

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதருஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1




மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலியஊர்களுக்குமொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ் : 8, கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை

" 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்

" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்

" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

# சொற்பொழிவு

## சபாநாயகர்கள் !

●

"தில்லை நடராசர் கோவிலின் ஒரு பகுதியை பழுது பார்ப்பதற்காக பணம் வேண்டுமென்றனர்" திரு சிவசண்முகம் பிள்ளை அவர்கள், 'தில்லை திருக்கலப் பணிக்குப் பணம் தந்து உதவுக' என்று—'சட்டசபை சபாநாயகராயிருக்கும், நாம் தில்லை சபாநாயகருக்கு சிபாரிசு செய்வது பொருத்தமே' என்ற எண்ணத்தினுல் போலு—அறிக்கை வெளியிட்டிருக்கிறார் என்ற செய்தி பார்த்தேன்; இந்தத் திருப்பணியைச் செய்வதில் ஈடுபட்டிருக்கும் சிவசண்முகம் பிள்ளையிடமிருந்து நாம் நல்ல பணிக்கு ஊக்கத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?

'நந்தன் சரித்திரம் தெரிந்திருந்தால்—அல்லது மறக்காதிருந்தால்—சிவசண்முகம் பிள்ளையவர்கள் தில்லை சபாநாயகருக்கு பணம் தருமாறு மக்களை கேட்டிருக்கமாட்டார்

நந்தன் தில்லை செல்ல விரும்பிய போது வேதியர், 'மாடு தின்னும் புலையா' என்று ஏசினர், 'போகத்தான் வேண்டும்' என்றபோது 40 ஏகர் நிலத்தையும் பயிரிட்டுச் செல் என்றார் நந்தன் 'நாளை போகாமல் நானிருப்பேனோ' என்று பாடி, ஆண்டவன் அருள் கிடைக்கப்பெற்று 40 ஏகர் நிலத்திலும் அன்றிரவே பயிர் ஏறியது. காலையில் அதைப் பார்த்த வேதியர் நந்தனின் பக்தியை உணர்ந்து காலில் விழுந்து வணக்கம் செய்து தில்லைக்கு அனுப்பி வைக்கிறார். இதனை எல்லாம் தெரிந்தும் நந்தனின் பக்தியையும் அதன் பெருமையையும் கூறக் கேட்டும் தீட்சிதர்கள் நந்தனை கோவிலுக்குள் நுழைய விட்டார்களா? நெருப்பு மூட்டியல்லவா நந்தனை அதில் இறங்கச் செய்தனர்? நந்தன் ஜோதியில் கலந்து விட்டதாக வன்றோ புராணம் எழுதினர்! 'சோதியில் கலந்தான் நந்தன்', என்றால் என்ன பொருள்? நெருப்பில் வெந்து மாண்டான் என்றுதானே பொருள்!

'என்ன பக்திமானாயிருந்தாலும், மாடு தின்னும் புலையன் கோவிலுக்குள் நுழைவதா?—என்று கேட்ட தீட்சதர்கள் வாழும் தில்லைக் கோவிலின் திருப்பணிக்குத்தான் சபாநாயகர், பொருள் தரக் கேட்டிருக்கிறார்; தமக்கும் 'சபாநாயகர்' என்று பெயர் இருக்கிறது—தில்லை நடராசாவுக்கும் 'சபாநாயகர்' என்று பெயர் இருக்கிறது—என்று இதைப் பேசி அவர் பூரித்துப்போனாரே தவிர தன் இனத்தவரான நந்தன் நெருப்பிலே தள்ளிப் பொசுக்கப்பட்ட இடம் தில்லை' என்பதை மறந்தே போனார்!

அப்படிப்பட்ட சிவஷண்முகம்பிள்ளை தனது சட்டசபைத் தலைவர் பதவியை காப்பாற்றிக் கொள்வதை மனதில் கொண்டு அதற்கேற்றபடி நான்பேசுவார் அவரிடமிருந்து நற்பணியிலீடுபட்டிருப்போருக்கு தொல்லைகளைத் தவிர, வேறென்ன நல்லதையா எதிர்பார்க்க முடியும்! நாம் செய்ய வேண்டியதெல்லாம் நமது ஆற்றல் படையினர்—அறிவுப் படையினர்—தவறான வழியில் போகாமல்—சிதறி விடாமல் பார்த்துக் கொள்வதுதான்.

சிவஷண்முகம் பிள்ளை கூறியதாக எனக்கு முன் பேசியவர்கள் கூறினார்கள்—'பார்ப்பானை வேண்டுமானாலும் நீக்கிவிடுங்கள்; பக்திக் காரியங்களை எப்படி நீக்கிவிடுவது!' என்று கேட்டாராம் அவர்!

பக்தி என்றால் எது! அது நமக்குத் தெரிந்தாக வேண்டும்; கிறிஸ்தவர்களை பார்த்தால் ஞாயிற்றுக் கிழமை யன்று ஒழுங்காக உடை யணிந்து கோவிலுக்குச் சென்று 'பரம பிதாவே! என்னை எனது பாவங்களுக்காக மன்னித்துவிடு என்று மண்டியிட்டு வேண்டிக் கொள்வதுடன் போதும்; அதுவே சிறந்த ஆண்டவன் பக்தி' என்கின்றனர்.

முஸ்லீம்களைக் கேட்டாலும் அவர்களும் தர்காவிற்குச் சென்று 'துவா' செய்து வேண்டிக் கொள்வதுடன் சரி என்று சொல்கிறார்கள்.

ஆனால் நம்மவர்கள்!

கோவை மாவட்டத்திலே காரமடை என்று ஒரு கிராமம்; அங்கு ஒரு அனுமார் கோவில்; ஆண்டுக்கொரு முறை திருவிழா; பூசாரி அனுமார் போல ஆடுவான்; மணமாகி 7 8 ஆண்டுகளாகியும் குழந்தையற்றவர்கள் பூசாரி ஆடிக்கொண்டிருக்கும்போதே அவன் வாயில் பழத்தை திணிப்பார்கள் எத்தனை தின்ன முடியும் பூசாரியால்! தின்றும் தின்னாமலும் அவன் வெளியே உமிழ்கிற எச்சில் பழத்தை சேலை முந்தானையினால் தாங்கி எடுத்து உண்கின்றனர் பெண்கள்—பிள்ளை பிறக்கும் என்ற நம்பிக்கையோடு! இது 'பக்தி'யின் பெயரால் நடக்கிறது. இந்த பக்தி தேவைதானா! என்பதை நமக்கு சிவசண்முகம் பிள்ளை கூறவேண்டும்.

'நாம் சொல்லுகிறோம்—'பக்தியின் பெயரால் இவைபோன்ற ஆபாசங்கள் வேண்டாம்' என்று! 'ஆண்டவன் ஒருவன் இருக்கட்டும் அவனை மனதார நினைத்து மக்கள் பக்தி செலுத்தட்டும்' என்று!

வேறோர் தலத்தில் நடைபெறும்—ஆண்டவன் விபச்சாரியை நாடிவிட்டு வீடு திரும்பியதும் ஆண்டவனின் அருமை மனைவி கோபங் கொண்டு வாழை மட்டையால் தண்டனை தரும் 'மட்டையடி விழாவும் பக்தியின் பெயரால்தான் நடைபெறுகிறது; இந்த பக்தி மக்களுக்குத் தேவைதானா!

என்று 12—6—55 மாலை சென்னை மாதவரம் தி மு. கழக சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

### அமைந்தகரை வரி செலுத்துவோர் சங்கக் கூட்டம்

5—6—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு அமைந்தகரை வேளாளர் தெருவில் தோழர் வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கோயில் நிர்வாகிகள் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் வீடுகட்டி குடியிருப்போர்களிடம் கடுமையான நிபந்தனையைப் போட்டு நடந்துவரும் போக்கினைக் குறித்தும் கலெக்டரும் சர்க்காரும் உடனடியாக இதுகுறித்து ஆவன செய்ய வேண்டுமென்பதை எடுத்துக் காட்டி தோழர்கள் கிருஷ்ணசாமி (பிள்ளை), சதாசிவ (உடையார்), கோ. இளவரசு, என் வி நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### கவசம்பட்டு

7-6-55 மாலை 6 மணிக்கு ஜி. சுந்திரம் அவர்கள தலைமையில் தி மு க. பொதுகூட்டம் நடைபெற்றது மாலை 6 மணிக்கு கழக தோழர்களால் ஈ வே. கி. சம்பத் அவர்களுக்கு சிறப்பான வாத்தியம்முழங்க வரவேற்பு கொடுக்க வரவேற்பு கொடுக்கப்பட்டது பிறகு வேலூர் கருத்தோவியன் போளூர் சுப்பிரமணியம் அவர்களும் சமுதாய முன்னேற்றமும் ஆரியக்கால் விளைந்த கேடுகளையும் நன்கு விளக்கி கூறினர். தோழர் சம்பத் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர்.

### குடந்தையில் பாராட்டுக் கூட்டம்

●

தஞ்சை மாவட்ட தி. மு. கழக சார்பில் 18-6-55 மாலை 6-மணிக்கு அரண்மனைத் தோட்டத்தில் பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்று பொதுக்கூட்டம் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடைபெறும் தோழர்கள் என். எஸ் இளங்கோ, க. அறிவழகன் ஆகியோர் பேசுவர்.

### திருச்சி மாவட்ட தோழர்கட்கு வேண்டுகோள்

ஜூலை முதல் வாரத்தில் நமது மாவட்டத்தில், வட்டக்குழு அமைக்க வேண்டியிருப்பதால், இதுவரை பதிவு செய்யப்பட்ட கழகங்கள் தவிர பதிவு செய்யப்படாத கழகங்கள் 30—6—55க்குள் தேர்தல் நடத்தி மாவட்டக் கழகத்துக்கும் தலைமைக் கழகத்துக்கும் அறிவித்து பதிவு செய்ய வேண்டுகிறேன்.

ஏ. பி தர்மலிங்கம், செயலாளர்

### அறிஞர் அண்ணா அவர்களின் சுற்றுப் பயணம்

●

ஜூன் 18. காலை—உளுந்தூர் பேட்டை
மாலை—விருத்தாசலம்
19. காலை—திருச்சி
(திருமண நிகழ்ச்சி)
மாலை—மாநில மாநாட்டு நிதியளிப்பு விழாக்கூட்டம்

**தஞ்சை மாவட்டம்**

20 மாலை—பேராவூரணி
21. மாலை—பட்டுக்கோட்டை
22. மாலை—முத்துப்பேட்டை
23. காலை—வேளூர்
(திருத்துறைப்பூண்டி அருகில் திருமணம்)
மாலை. மாயவரம்

குறிப்பு:-இக்கூட்டங்கள் அனைத்தும் மாநில மாநாட்டுக்கு நிதி அளிப்பு நிகழ்ச்சிகளாக நடைபெறும்.

### திருச்சியில் நிதியளிப்பு விழா பொதுச்செயலாளர் வரவேற்பு

●

19—6—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு திருச்சி டவுன் ஹால் முன்பு தோழர் ஏ. பி. தர்மலிங்கம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும் பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன், அறிஞர் அண்ணா, கே ஏ மதியழகன், இராம அரங்கண்ணல், தில்லை வில்லாளன், ஆகியோர் பேசுவர்.

—திருச்சி மாவட்ட தி. மு. க.

### இராயப்பேட்டை

சென்னை இராயப்பேட்டை தி.மு க. (37 வது வட்டம்) பணிமனையில் செயற்குழுக் கூட்டம் 4—6—55 சனி இரவு 9 மணிக்கு செயலாளர் கோ. இளவரசு தலைமையில் நடைபெற்றது. ஆறு ஆண்டு காலம் வரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளராக இருந்து அரும்பெரும் பணியாற்றிய அறிஞர் அண்ணா அவர்கட்கும் அவருடன் சிறப்புடன் பணியாற்றிய பொதுக்குழு உறுப்பினர்கட்கும் இச்செயற்குழு தனது நன்றியறிதலையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்வதோடு புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுச் செயலாளர் இரா நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றும் பாராட்டியும் தெரிவித்துக்கொண்டு அன்னாரை ஏகமனதாக தேர்ந்தெடுத்த பொதுக்குழு உறுப்பினர்களுக்கும் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொண்டு முன்னாள் மாவட்ட செயலாளர் கே. எம். கண்ணபிரான் அவர்கட்கு நன்றியறிதலையும் பாராட்டுதலை தெரிவித்துக்கொண்டு இந்நாள் செயலாளர் இளம்பரிதி அவர்களை வரவேற்றும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டும் இராயப்பேட்டை வட்டத்திலுள்ள பொதுமக்களுக்கு கழகக் கொள்கைகளை மேலும் மேலும் விளக்கும் முகத்தான் வாரத்திற்கு ஒருமுறை சுவரொட்டியின் மூலம் எழுதி விளக்கம் கொடுப்பதென முடிவுசெய்யப்பட்டது.

### மறைவு

வண்ணையம்பதி வேலாயுதம் படிப்பக செயலாளர் தோழர் இரா. ஜெகன்னாதன் அவர்களின் பெண்குழந்தை 8 6 55 அன்று இறந்துவிட்டமைக்காக 4-வது வட்ட தி. மு கழகத்தினர் அனுதாபம் தெரிவிக்கிறார்கள்.

### நன்றியறிவிப்பு

12—6—55-ல் கடலூர் ஓ டி. 2-வது வட்ட தி. மு. கழகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த தோழர்கள் என் வி. நடராசன், எ. கோவிந்தசாமி, எம். எல் ஏ., இரா. சாம்பசிவம், முத்துரங்கம் அவர்கட்கும் 1-2-வது வட்ட நிர்வாகிகளுக்கும் ஒத்துழைப்பு தந்த பொதுமக்களுக்கும் எனது பணிவன்பான நன்றியறிதலை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

சி. கோவிந்தராசன்
செயலாளர், கடலூர் ஓ. டி.

### அடுத்த வாரம்

- அறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவு.
- இளஞ்சேரனின் பூங்கொத்துகள்.
- கோயபல்ஸ் மாடல் பிரச்சாரத்திற்கு நக்கீரன் கொடுக்கும் சாட்டை.
- சுமைதாங்கி-(தங்கவேலர்) தொடர்கதை.
- கலையரங்கப் பகுதியில் தமிழ்ப் படங்களைப்பற்றி..?

ஆகியவைகள் 24-6-55 திராவிடன் இதழில் வெளிவரும்.

—நிர்வாகி திராவிடன்

### திராவிடன் வாசகர்களுக்கு

வணக்கம். உங்களின் ஆதரவால் கடந்த எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றிவரும் திராவிடன் ஆகஸ்டு 12-ந் தேதியிலிருந்து 9-வது ஆண்டைத் துவக்க யிருக்கிறான்.

திராவிடத்தின் உரிமைக்காக சகோதர பத்திரிகைகளுடன் சேர்ந்து தொண்டாற்றிவரும் திராவிடன் 9-வது ஆண்டு துவக்கத்திலிருந்து மேலும் புதிய அமைப்புகளுடன் தனது கடமையைச் செய்ய ஆவன செய்யப்பட்டு வருகிறது. மற்ற விவரங்கள் அனைத்தும் அடுத்து அறிவிக்கப்படும். எனவே திராவிடன் ஆற்றிவரும் பணி மேலும் சிறப்பிக்க வாசகர்களும் கழகத் தோழர்களும் தங்களின் பேராதரவைத் தருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

—நிர்வாகி—'திராவிடன்'

**சமுதாயமும்—தொழிலாளரும்...தொடர்ச்சி**

சில்லரைக் கடையை நோக்கி. ஒருஅணுவிற்கு கற்பூரம் வாங்கி வருகிருன்." ஆண்டவனே இன்றுபோல் என்றும் வேலை கிடைத்தால் நான் தினமும் இரண்டணு கற்பூரம் வாங்கி கொளுத்துகிறேன்—இந்த ஏழையின்மீது இரக்கம்காட்டு" என அந்த கற்சிலையின் முன் தன் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ருன் கந்தன். அந்த இடிந்த கோவிலின் வெளிப்புறத்தில் நின்று கொண்டு இருந்த கழுதை ஒன்று அந்த நேரத்தில் கத்துகிறது. கந்தன் மனம் எண்ணுகிறது கழுதைகத்திஞல் கைகண்ட சகுனம்என்பார்களே, நாம் கூறிய குறைகளை ஆண்டவன் ஏற்றுக்கொண்டார் என மகிழ்ச்சிப் பெருக்கால், கன்னத்தில் இன்னும் நாலுபோட்டுக்கொண்டு, கணக்கற்ற தோப்புக்கரணங்களும் போட்டுவிட்டு, தன் மடியிலே இருக்கும் மீதிபட்டுயொரு அணுவை எடுத்துக்கொண்டு வீடுநோக்கி நடக்கிருன் நான்கு வயிற்று பசியின் கொடுமையை அடக்க.

மேற்குறிப்பிட்ட சம்பவங்கள் நாட்டிலே நடவாதநிகழ்ச்சி என எவரும் மறுக்க முடியாது. இன்று இரவு மழை பெய்தால் நூறு தேங்காய் உடைக்கிறேன் ஆண்டவனே அருள் புரிவாய்' என விவசாயியும், இன்றிரவு மழை பெய்யாவிடில் நூறு தேங்காய் உடைக்கிறேன் ஆண்டவனே என நாடகக் கம்பெனி சொந்தக்காரரும் கடவுளைப் பிரார்த்திக்கும் காட்சியை நாம் கண்முன்னே காண்கிறேம், இரண்டில் ஏதாவது ஒன்று நடைபெறுகிறது—நூறு தேங்காயும் உடைபடுகிறது அதற்கான விலை என்ன என்பதை நாம் பார்க்க வேண்டும், இந்த இடத்தில் பொருளாதாரம் தேவை இல்லையா?

இந்த எண்ணங்கள் சமுதாயத்தால் விளைவது—இந்த எண்ணங்கள் நிறைவேற பொருளாதாரம் தேவைப்படுகிறது. இவை மட்டும் உதாரணம் காட்டி நாம் சமுதாயத்திற்கும், பொருளாதாரத்திற்கும் தொடர்பு உண்டு என சுட்டிக் காட்ட விரும்பவில்லை சமுதாயத்திற்கும் பொருளாதாரத்திற்கும் சம்மந்தம் இல்லை எனக் கூறும் பரந்தகண்ணேட்டக்காரர்கள்—நாட்டு நிலவரங்களையும் பொருளாதாரம் எங்கே முடங்கிக்கிடக்கிறது என்பதையும்பார்க்கவேண்டும். எண்ணற்ற நோய்களால் பீடிக்கப்பட்டு—மரணத்தோடு போராடிக் கொண்டு அவதிப்படும் மக்களுக்கு மருத்துவ உதவி அளிக்க எத்தனை மருத்துவச் சாலைகள் உண்டு இந்த நாட்டிலே? மேலை நாடுகளிலே நூற்றுக்கு எண்பது பேர் கல்வி அறிவு பெற்றிருக்க—நூற்றுக்கு இருபது பேர் கூட கல்வி அறிவு பெருத இந்த நாட்டில் எத்தனை கல்விச்சாலைகள் உள்ளன? இந்த நாடு முன்னேற எத்தனை விஞ்ஞானக் கூடங்கள் உள்ளன? இவையனைத்தும் கணக்கெடுத்துப் பாருங்கள். இந்த நாட்டிலே பக்தியின் பெயரால்—கடவுளின் பெயரால்—மதத்தின் பெயரால்—சாதியின் பெயரால் எத்தனை ஆலயங்கள்? எத்தனை மடங்கள்? எத்தனை ஏக்கர் விளைநிலங்கள்? எத்தனை சத்திரங்கள்? எத்தனை பள்ளியறைகள்? எத்தனை தங்கப்பல்லக்குகள்? எத்தனை தங்க வாகனங்கள்? எத்தனை தங்க நகைகள்? எத்தனை வைரங்கள்? எத்தனை விலையுயர்ந்த கல் பதித்த மூக்குத்திகள்? இவைகள் ஏற்பட்டது எதனுல்? சமுதாயத்தால்தானே? மறுக்க முடியுமா? மறைக்க முடியுமா?

இந்த நாட்டிலே கல்வி அறிவுபெற கல்விச்சாலைகள் இல்லை — ஆண்டவனுக்கு எனக்கூறி ஆலயம் ஆயிரமாயிரம். கண்ணற்றவர்களுக்கு முடமானவர்களுக்கு சயரோகத்தோடு போராடுகிறவர்களுக்கு உதவியளிக்க நாட்டிலே மருத்துவமனை இல்லை —ஆனுல் ஆண்டவன் பெயரால் ஆயிரமாயிரம் ஏக்கர் நிலம், அதிலே விளையும் செல்வம் அனைத்தும் ஒருசில நயவஞ்சகர்களுக்கு ஏகபோக உரிமை. நாட்டிலே வறுமை ஓர் புறம், கால் வயிற்றுக் கஞ்சிக்கும் அவதிப்படும் நிலை—வெயிலிலே, மழையிலே ஒண்ட இடமின்றி வீதிகளிலே நடைபாதைகளிலே ஆயிரமாயிரம் குடும்பங்கள்—ஆனுல் இங்கே ஆண்டவன் பெயரால் வெட்கக்கேடான நிலை! இந்த இருபதாம் நூற்ருண்டில் மாற்ருர் வியக்கும் அற்புத சாதனைகளை கண்டுபிடித்துக் கொண்டு மேலைநாடுகள் பலவும் முன்னேறிச் செல்லும் இந்த நாளில் இந்த நாட்டில் கீழ்த்தரமான எண்ணமும் கேடுகெட்ட நிலையையும் மறையாமல் மங்காமல் பாதுகாக்கப்பட்டு வருகிறது—இத்தகைய பிற்போக்கு சக்திகளுக்கு கம்யூனிஸ்டுகள் எனக் கூறிக் கொள்வோர் இந்நாட்டில் குனிந்து முட்டுக் கொடுத்து காக்க நினைக்கின்றனர். பாவம் அவர்கள் நிலைகண்டு நாம் அனுதாபப் படுவதைத் தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை.

சமுதாயத்தின் கோடிக் கணக்கான செல்வங்கள் மூடப் பழக்கவழக்கத்தால் பாழாக்கப்படுகிறது. இவைகளை யெல்லாம் நாம் எடுத்துக் காட்டித்தான் இந்த சமுதாயம் சீர்திருந்தினுலன்றி பொருளாதாரம் மறுமலர்ச்சி அடைய முடியாது என்று திட்டவட்டமாகக் கூறிவருகிறேம்.

இவைகளை நாம் கூறுகின்ற போழுது தான் 'சமுதாயம் வேறு—அரசியல் வேறு' சமுதாயத்தைப் பற்றிய அக்கரை தொழிலாளாகளுக்கு வேண்டாம்—இன்னும் புதியதாக பிள்ளையார் கோயில் கட்டுங்கள், கம்பராமாய்ண உபந்நியாசம் செய்யுங்கள், அதில்தான் பொதுஉடமைத்தத்துவம் இருக்கிறது, மக்கள் வறுமையற்ற வாழ்வு வாழ அதுதான் சிறந்த வழி என சிலர் கூறுகின்றனர்.

உண்மைநிலை என்ன என்பதை நாடும் — மக்களும் உணர்ந்து வரும் இந்த நாளில் கம்யூனிஸ்ட்டுகளின் பிற்போக்கு விதண்டா வாதங்களை, பத்தாம் பசலிக் கொள்கைகளை, வளர்ந்துவரும் மறுமலர்ச்சிக் கருத்துக்கள் முறியடித்து வெற்றி நடைபோடும் என்பது திண்ணமாகும். எனவேதான்சமுதாயம்—அரசியல்—பொருளாதாரம் ஆகிய இந்த மூன்று துறைகளிலும் இந்த நாடு விடுதலை பெற. திராவிட நாடு திராவிடர்க்காக்கப்பட்டாக வேண்டும். அப்பொழுதுதான் நல்வாழ்வுவாழ, உலகில் நன்மதிப்போடு இருக்க, சுரண்டல் அற்ற ஒரு சமுதாயத்தை அதாவது ஆங்கிலோ அமெரிக்க சுரண்டல் ஆயினும் சரி டாடா பிர்லா போன்ற வடவர்களாயினுஞ் சரி, திராவிடத்து சீமானுயினும் சரி சமுதாயத்தில் தர்ப்பைப் புல்லேந்தி சுரண்டும் 'எவாள்' ஆயினுஞ் சரி, சுரண்டல் எந்த ரூபத்தில் முகமூடி அணிந்து வந்தாலும் —அதை அழித்து—அழிக்கப்பட்ட ஒரு உண்மையான சமதர்மப் பூங்காவாக இந்த திராவிடத்தை ஆக்கியாக வேண்டும். அதுவே நாம் நமது நாட்டிற்கு செய்யும் பணியாகும். அத்தகு பணிக்கு நம் நாட்டுத் தொழிலாளர்கள் அணிவகுத்து நிற்பார்களாக.

கோவை. இரா. சுந்தரம்

★

மீர்சாகிப்பேட்டை அழகிரி நாடக மன்றத்தாரின்

"அத்தான்"

●

9—7—55 சனி மாலை 6-மணிக்கு

எழும்பூர் மியூசியம் தியேட்டரில் நடைபெறும்

பிறவிவரங்கள் ? ?

**சுவைத்துப் பாரீர்...தொடர்ச்சி**

யின் கழுத்தின் நீளத்தையும், காதுகளின் சிறுமையையும் கண்டு ஒட்டச் சிவிங்கி என்ருர். தன்னை ஒரு யானை அதன் தும்பிக்கைக் கொணடு சுற்றிச் கொள்ளச் செய்து, அதன் தன்மைகளை உய்த்துணர்ந்துச் சொன்ஞர். ஒரு பழகிய பாம்பையும் தன்னைப் பின்னிக் கொள்ளச் செய்து பாம்பைப் பற்றியும், பாம்பின் பிடியைப் பற்றியும் பகர்ந்தார்.

பகலில் வீசும் காற்றுக்கும், இரவில் வீசும் காற்றுக்கும் வித்தியாசங்களை கற்றறிந்து இது பகலென்றும், இது இரவென்றும் கூறுகிருர். காற்று மெல்லியதாய் வீசிஞல், இலேசானவாடை மணந்தால், அலைகளின் சக்தி அதிகங் காணப்பட்டால்—அது பகலாம். இதற்கு நேர்மாருக உள்ள போது இரவாம், இது வெய்யில் தம்மீது படாது, அறையிலேயே முழுநேரமும் கழிக்கும் போதுதான். வெய்யிலில் வந்தால் பகலென்று கூறுவதில் ஆச்சரியமில்லை. ஆனுல் பகல் மாறி இரவு வருவதை அவர் உணர்வாராம். அதேபோல் பொழுது புலர்வதையும் உணர்வாராம்.

அதோடு பலர் முகங்களைத் தொட்டுப் பார்த்து அம்முகங்களுடையோர் எத்தன்மைத்தவர் என்று சரியாக சொல்லிவிடுகிருராம்.

அம்மாதிரி சர்ச்சில், நேரு, டாக்டர் ராதாகிருஷ்ணன், பர்மா பிரதமர் யூ. நூ. முதலியவாகளைத் தொட்டுப் பார்த்து அவரவரது சுபாவங்களைக் கணித்துக் கூறிஞராம்! நிற்க

மிஸ் ஹெல்லன் கெல்லரை இங்கே ஞாபகமூட்டிய ஒருவர் கோயம்புத்தூரில் காட்சியளித்தார்.

அவர் **இராமய்யா** என்பவர். **குருடர்!** வயது 55. அவர் மாடுகளைப்பற்றி தொட்டு அனுபவித்தே இது இன்ன மாடு, சிறந்த மாடு, சப்பை மாடு, பொதிசுமக்க ஒவ்வாத மாடு என்றெல்லாம் தாம் கணித்துச் சொல்லும் நீண்ட நாள் பழக்க முடையவராம். பட்டிக்காட்டு வாசிதான். படிக்காதவர் தான். ஆனுல் மாடுகளைப் பிதம் பார்த்து உரைப்பதில் கெட்டிக்காரர்.

சமீபத்தில் கோயம்புத்தூரில் **அனைத்திந்திய கால்நடைக் காட்சி** ஒன்று நடந்தது.

அதில் ஒரு தலைசிறந்த **காங்கேயக் காளை** பரிசிற்குரியது என்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

பரிசு உண்டென்ருே, பரிசு பெற்ற காளை அதுவென்ருே ஒன்றும் அக்குருடருக்குத் தெரியாது. அவரையும் யாரும் பரிசு பெற்ற மாடு எதுவென்று காட்டச் சொல்லவுமில்லை.

ஆனுல் இராமய்யாக் குருடர் காட்சியில் கட்டப்பட்ட எல்லா மாடுகளையும் ஒவ்வொன்ருகத் தொட்டுப் பார்த்துக் கொண்டே வந்து, முடிவில் ஒரு காளை மாட்டிடம் வந்து இதுதான் கண்டிப்பாய் பரிசு பெற்றிருக்கும் என்று சொன்ஞராம். அதுதான் **காங்கேயக் காளை**—ஏற்கனவே தீர்ப்பாளர்கள் (கண்படைத்தோர்) முதற் பரிசுக் காளை என்று தேர்ந்தெடுத்தது! குருடரின் 'மாடு பார்க்கும் பண்பு' அபாரத்திலும் அபாரம் என வியந்தார்களாம்! குருடரின் திறமையை மெச்சிஞர்களாம்!

இம்மாதிரியான நிகழ்ச்சியை ஒட்டித் தானே என்னவோ "**இதைக் குருடனும் கூறுவானே**" என்ற சொல் வழக்கில் வந்தது போலும்.

அத்தகைய குருடரைத்தான் நான் "**கெல்லர் பரம்பரை**" என்கிறேன்.

●

# செய்திகள்

## பம்பாய்

கொலாபா தி. மு. க. கிளை கழகத்தின் மாதாந்திரக் கூட்டம் தோழர் கே. கே. இராமநாதன் தலைமையில் 10-6-55 இரவு 9-30 மணிக்கு கூப்ரேஜ் திடலில் நடைபெற்றது. தோழர் மந்திரகேந்திரம் கழகப் பண் பாடியதும் கணக்கு வரவு செலவுகள் சரிபார்க்கப்பட்டு வந்திருந்த உறுப்பினர்கள் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டன. அடுத்து, சொற்பேச்சு தேர்வு நடைபெற்றது. அதில் சிறந்த பேச்சாளராக க. சு. செகநாதன். எ. எஸ். தாஸ், எஸ். கே. ராஜூ ஆகியோர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு கழக சார்பாக பரிசுகள் வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டது.

அடுத்து வருகிற 18-6-55 அன்று பம்பாய் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அவர்களை அழைத்து மாநில மாநாட்டுக்கு நிதி அளிப்பதென்று முடிவு செய்யப்பட்டது. தோழர் எஸ். பி. பெருமாள் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

### வரவேற்புக் கூட்டம்

பம்பாய் தி. மு. க. பொதுச் செயலாளர் தோழர் எஸ் தியாகராசன் அவர்கட்கு 29-5-55 ஞாயிறு மாலை 7-30 மணிக்கு திராவிடரகத்தில் தாராவி தி. மு. க. செயலாளர் தோழர் சி. த. மு. இரா ஆரியசங்காரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

துணைச் செயலாளர் தோழர் சா. தர்மராசன் கூட்டத்தைத் துவக்கி வைத்தார். தலைவர் முன்னுரையில், தியாகராசன் அவர்களின் அரும்பணியைப் பாராட்டிப் பேசினர். மற்றும் தோழர்கள் நாஞ்சில் ஜி. இராசாமணி, ஏ எல். பெருமாள், உ. அ செல்லையா, சி சிவ குருநாதன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

பொதுச் செயலாளருக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

## ஆமதாபாத்

5-6-55-ல் ஆமதாபாத் தி. மு. க. பொது உறுப்பினர்கள்கூட்டம் ஆர். டி. அசலம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ந தேவாசு, டி. பி பாலகிருஷ்ணன், ச. சந்திரன். கே. ஜி சேகர் இரா. வைத்திலிங்கம், ஆகியோர் கழக வளர்ச்சி பற்றி பேசியபின், சேலம் மாவட்டச் செயலாளர் ஜி பி சோமசுந்தரம் அவர்களின் அன்னையாரின் மறைவுக்கு அனுதாபமும். மணிநகர் வட்டச் செயலாளர், ச. சந்திரனும் அவர்தம் குடும்பத்தினரும் 29-5-55-ல் கழக மேதின விழா கூட்டத்திற்கு வந்து. வீடு திரும்பும் சமயம் கொள்கை வேறுபாட்டால் காலிகளால் தாக்குண்டதற்கு அனுதாபத் தீர்மானமும் நிறைவேறின.

## இலங்கை

இலங்கை திராவிட முன்னேற்றக் கழக செயற்குழுக் கூட்டம் கழக அலுவலகத்தில் 22-5-55-ம் நாள் மாலை 4-45 மணிக்கு கூடியது குழு உறுப்பினர்களை வரவேற்று பொதுச் செயலாளர் தோழர் இரா. அதிமணி பேசுகையில் கூட்டத்தில் கூட்டத்தின் முன்னிருக்கும் பிரச்னைகள் குறித்து விளக்கினார். பிறகு தோழர் நாகரத்தினம் தலைமை தாங்கிக் கூட்டத்தை நடத்தினார். இலங்கை தி. மு. கழக தலைமை நிலைய சார்பில பொதுக் கூட்டம் நடத்துவது என்றும், கடந்த செயற்குழுகளுக்கு உறுப்பினர்களில் சிலர் தொடர்ந்து கூட்டங்களுக்கு வராதிருப்பதால் அதுபற்றி ஆவன செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டதுடன் தோழர் எம். ஐ. ராஜாமணி அவர்கள் தமிழ்நாடு செல்வதால் அவர் சமர்ப்பித்துள்ள ராஜிநாமா கடிதமும் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது. கழக சட்டதிட்டப்படி காலியான ஸ்தானங்களுக்குத் தோழர்கள் தலுவத்தை (சிங்களத் தோழர்) மணவத்பிம்பி, சண்முகவேல் ஆகியோர்களை தேர்ந்தெடுக்கப்பட்டது

இலங்கை தி மு. கழகத்தின் துணைச் செயலாளராக இதுவரை இருந்துவந்த தோழர் இரா. மணவழகன் அவர்கள் தமது கடமையைச் சரிவர செய்யாதிருப்பதைக் கண்டித்து அதற்கான முடிவும் செய்யப்பட்டது.

பின்னர் சட்ட திட்டக் குழு செயலாளர் அ. ம. அந்தோணிமுத்து அவர்களால் கழக சட்டதிட்டம் வாசித்தளிக்கப்பெற்று நிர்வாகக் குழுவினரால் ஒப்புக் கொள்ளப்பட்டதுடன் மேற்படி சட்ட திட்டங்கள் பொதுக்குழு உறுப்பினர்களின் பரிசிலனைக்கு அனுப்பப்பட்டு பொதுக்குழுக் கூட்டத்தில் ஊர்ஜிதம் செய்யப்பட வேண்டுமெனவும் தீர்மானித்து பின்னர் சுமார் 8-மணிக்கு கூட்டம் இனிது நிறைவேறியது.

### முத்தமிழ் மன்றம்

மேற்படி மன்றத்தினரால் மன்றப் பணிமனையில் கடந்த 4-6-55ம் ஆண்டு மாலை 4 மணி அளவில் திரு மா. முத்து விநாயகம் தலைமையில் திருவள்ளுவர் விழா சிறப்புடன் கொண்டாடப் பெற்றது. அவ்வமயம் மன்றப் பள்ளி மாணவிகளால் மன்றப் பாடல் பாடப் பெற்றது பின் வள்ளுவர் விழாவைப் பற்றியும் திருக்குறளைப்பற்றியும் தி இளங்கதிர், என். கோபாலன் எல். தர்மராசன், எஸ் சுப்பராயன். ஜே சோமசுந்தரம் ஆகியோர் பேசினர். இறுதியில் மாணவ மாணவிகளுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கியபின் செயலாளர் நன்றி நவில கூட்டம்முடிவுற்றது.

*

இராமநாதபுரம் மாவட்டம் செல்வரசன் கோட்டை தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் (இலங்கை) மாதப் பொதுக் கூட்டம் 3-6-55 வெள்ளிக் கிழமை கொள்ளுப்பட்டி காலிவோட் 510/4 இலக்க இல்லத்தில் தலைவர் திரு அ. ச. வேல் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பின் செயலாளர், பொருளாளர் ஆகியவர்களால் கடந்த கூட்ட நிகழ்ச்சி, வரவு செலவு கணக்கு கடித குறிப்புகள் சமர்ப்பிக்க ஒப்புக் கொள்ளப் பட்டன.

மாத விவாத அரங்குகளில தோழர்களான, சி. விஸ்வநாதன், து. வெ. இராக்கன் சா. வெ. இராமச்சந்திரன் வே. பாக்கியம், சு. மாதமன் மு. க முனியசாமி க. சிவானந்தம், எஸ் எம். துரைசாமி, இரா. ச. பொன்னம்பலம் ஆகியவர்கள் பங்குபெற்று சிறப்பித்தார்கள்.

புதிய செயற்குழு உறுப்பினர்களாக மு. லெட்சுமன். ம. சின்னமணி, தா. வே. இராக்கன், வெ. பாக்கியம் ஆகியவர்கள் தெரிவு செய்யப்பட்டது தமிழகம் செல்லும் திரு. சா. வெ. இராமச்சந்திரனுக்கு பிரியா விடை கூறப்பட்டது.

திருமதி ம. சி. வெ. அழகம்மாள். செல்வி மெ. கா. கமலம் ஆகியவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து தீர்மானம் நிறைவேறின.

### மதுரை

12-6-55 மாலை 4 மணிக்கு மதுரை கீழ்ச்சந்தைப்பேட்டை அண்ணாதுரை இலவசப் படிப்பக நிர்வாகக்குழு கூட்டம் செயலாளர் எஸ். மூனியப்பன் தலைமையில் நடைபெற்றது,

ஆண்டுவிழா வரவுசெலவு சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது.

சென்னை சர்க்காரால் வெளியிடப்பட்ட தீண்டாமை ஒழிப்புப்படம் விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டதைக் கண்டித்தும் மீண்டும் அப்பட விநியோகம் நிறுத்திவைக்கப்பட்டால்அதை எதிர்த்து நடவடிக்கை எடுக்க தி மு. கழக மத்திய கழகத்தைக் கேட்டுக் கொள்கிறது.

மத்திய சர்க்கார் மந்திரிகள் திராவிடத்துக்கு வரும்போது இந்தி எதிர்ப்பின் அறிகுறியைக் காட்ட அனுமதிக்க தி மு. கழக பொதுச்செயலாளரை கேட்டுக்கொள்கிறது என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆண்டுவிழா நன்கொடை வரவு ரூ. 328—0—0

ஆண்டுவிழா செலவு ரூ. 266—5—6

நீக்கி இருப்பு ரூ. 61—0—6

### வண்ணை

5-6-55 ஞாயிறு இரவு $7\frac{1}{2}$ மணிக்கு வண்ணை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவு படிப்பகத்தில் சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் இளம்பரிதிக்கு தோழர் நா. தி. சு. மூர்த்தி தலைமையில் படிப்பக உறுப்பினர்களால் வரவேற்பும், தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது. பாராட்டுதலுக்கு இளம்பரிதி நன்றி தெரிவித்தார்.

### சென்னை 3-வது வட்டம்

11-6-55 சனியன்று மாலை 8 மணிக்கு கழக பணிமனையில் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது அப்போது நிறைவேறிய தீர்மானங்கள்:- முன்னாள் பொதுச்செயலாளர் அண்ணா மாவட்டச் செயலாளர் K. M. கண்ணபிரான் ஆகியோருக்கு நன்றியறிதலும், புதிய பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி ஆகியோருக்கு பாராட்டுதலும் தெரிவித்துக் கொள்கிறது. கிளைக் கழக உறுப்பினர் வை. அண்ணாமலை சென்றத் திங்கள் இயற்கை யெய்தியமைக்கு வருததமுன், அனுதாபமும் தெரிவித்துக் கொள்கிறது.

கழக சந்தா, பொதுக்கூட்ட வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேறியது.

---

### ஆரம்பக் கல்வி...தொடர்ச்சி

நினைத்தபோது வருவது நினைத்தபோது நின்றுவிடுவது என்ற விரும்பத் தகாத பழக்கம் இவர்களிடையே நிலவி வருகின்றது. கல்வி கற்க வேண்டும் என்ற அக்கறை என்பதே இல்லாமல் வாழ விடப்படுகிறார்கள் இச்சிறுவர்கள்.

இரு ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் நடந்து வருகின்றன. இப்பள்ளிகளில் நாயர்கள், முஸ்லீம்கள், கீழ்சாதியர்கள் கூட சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் ஒவ்வொரு பள்ளியிலும் 40 க்குக் குறையாமல் மாணவர்கள் கல்வி பெற்று வருகின்றனர்.

தலைச்சேரியிலும் மங்களூரிலும் தொழிற்கல்விப் பள்ளிகள் நடைபெறுகின்றன; இவைகள் போர்டிங் பள்ளிகளுடன் இணைக்கப்பட்டுள்ளன மாணவர்கள் தமது கல்விநேரத்தில் ஒரு பகுதியை தொழிற் கல்வி கற்பதில் செலவிடுகின்றார்கள் நெசவு—தோட்டவேலையும் செய்கின்றனர் புத்தக பைண்டிங் அச்சுக் கோர்த்தல் ஆகியவைகளை கற்றுக் கொள்கின்றனர். மங்களூரில் உள்ள தொழிற் கல்வி பள்ளியில் கடிகாரம் செய்யும் பயிற்சியும் அச்சு இயற்றும் பயிற்சியும் கொடுக்கப்படுகின்றன. ஜெர்மனியிலிருந்து வந்துள்ள நெசவு நிபுணர்கள் ஜமக்காளம் தலைப்பாகை கைகுட்டை ஆகியவைகள் நெய்வது பற்றிய பயிற்சிகளைக் கொடுத்து வருகின்றனர். புத்தக பைண்டிங் செய்வதில் மட்டும் இந்த ஸ்தாபனத்திற்கு ஆண்டிற்கு 300 ரூபாய் லாபம் கிடைக்கின்றது இப்பள்ளிகளில் கிருஸ்துவ மத போதனைகளும் செய்யப்பட்டே வருகின்றன. தமது தாய்மொழியான ஜெர்மன் மொழியிலும் மாணவர்களுக்கு பயிற்சிக் கொடுத்து வருகின்றனர்' என்று ஜோசப் முல்லன்ஸ் கூறுவதினின்றும் 100 ஆண்டுகட்கு முன்னர் மலையாள துளு கன்னடப் பகுதிகளில்கிருஸ்துவப் பாதிரி மக்களால் நடத்தப்பட்டு வந்த கல்வித் தொண்டின் பெருமை தெரிய வரும். மேலும் இப்பாதிரிமார்களால் மலையாள கன்னட மொழிகளும், அம்மொழிகளின் இலக்கியங்களும் வளர்ச்சிப் பெற்று வந்தன. இவ்வுண்மையை ஜோசப் முல்லன்ஸ் எடுத்துக் காட்டியுள்ளார்.

'இவர்கள் இங்கு வந்ததிலிருந்தே அச்சு யந்திரங்கள் நிறுவுவதிலும் உள்நாட்டு மொழி நூல்கள், கிருஸ்துவ நூல்கள் ஆகியவற்றை வெளியிடுவதிலும் கருத்தாக இருந்து வருகின்றனர். மங்களூரில் உள்ள அச்சு யந்திரம் துளு கன்னடம் நூல்களை அச்சியற்றவும், தலைச்சேரியில் உள்ள அச்சு யந்திரம் மலையாள நூல்களை அச்சியற்றவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தலைச்சேரியில் அச்சியற்றப்பட்ட நூல்களில் மலையாள இலக்கணம் குறிப்பிடக் கூடியதாகும். இந்நூல் டாக்டர் குண்டர்ட் அவர்களால் அரிதின் முயன்று செய்யப்பட்டதாகும். கிருஸ்துவவேத புதிய ஏற்பாடும் மற்ற நூல்களும் இவரால் கன்னடத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. மூல்கி கிராமத்தில் தொண்டாற்றி புகழ் பெற்ற பாதிரியான மிஸ்டர் அம்மான் என்பார் துளுமொழியில் புதியஏற்பாட்டை மொழி பெயர்த்துள்ளதோடு மற்றும் சில கிருஸ்துவ நூல்களையும் வெளியிட்டுள்ளார் இவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து தங்கள் நலனிற்காக ஒரு நூல் நிலையம் ஏற்படுத்திக் கொண்டனர். இந்நூல் நிலையம் Bililotheca Carnataca எனும் பெயரால் வழங்கப்பட்டது. மேல் நாட்டவர்கள் இந்நாட்டின் மொழி இலக்கியங்கள் பற்றியும் மக்கள் நாடு ஆகியவைகளைப் பற்றியும் விவரமாகத் தெரிந்து கொள்வதற்காகவும் இந்நூல் நிலையம் தேவைப்பட்டது' எனக் கூறியுள்ளதினின்றும் அக்காலத்தில் மேலை நாட்டுப் பாதிரிகளால் மலையாள கன்னட மொழிகளும் இலக்கிய இலக்கணங்களும் வளர்ச்சியடையத் துவங்கிய வரலாறு தெரியவரும். டாக்டர் குண்டர்ட் அவர்கள் சில செப்புப் பட்டயங்களைப் படித்து அதன் உண்மை வாசகங்களைத் தெரியப் படுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்துடன் சிரியன் கிருஸ்துவ சங்கத்தினர் திருவாங்கூர் வடபகுதியில் ஆற்றிய கிருஸ்துவ தொண்டுகளையும் நாம் அறிதல் வேண்டும். இவர்களுடைய செல்வாக்கு திருச்சூர், கோட்டயம், மாவெலிக்கரை, திருவில்லா, பல்லம் முதலிய இடங்களில் சிறப்புற்றிருந்தன. முல்லன்ஸ் அவர்கள் குறிப்புப்படி ஐம்பது சிரியன் கிருஸ்துவப் பள்ளிகள் சிறுவர்கட்குப் கல்வி புகட்டி வந்தன. 150 பெண்கள் போர்டிங் பள்ளிகளில் கல்வி பெற்று வந்தனர். கோட்டயத்தில் மிஸ்டர் பெய்லி என்பாரின் முயற்சியால் அச்சு யந்திரம் அமைக்கப்பட்டது. —தொடரும்

—திராவிடப்பித்தன்

(காலம் மாறிவிட்டது)

●

திரைப்பட உலகில் மிகத் தாழ்ந்திருந்த தமிழ்ப்பட தயாரிப்பாளர்களுக்கும், தமிழ்ப் படங்களுக்கும் என்றுதான் விடுதலை கிடைக்குமோ—மற்ற படங்களுடன் போட்டியிட ஓரளவுக்காவது புத்துணர்வு ஏற்படுமோ என்று தமிழ்ப்பட ரசிகர்கள் எதிர்பார்த்திருந்தனர். தமிழ்ப்படத் துறையிலே முதல் முதல் அத்தகைய புத்துணர்ச்சியை ஊட்டியது அறிஞர் அண்ணா அவர்கள்தான் என்பதை திரைப்பட ரசிகர்களும் தயாரிப்பாளர்களுமே ஒப்புக்கொள்வர். வேலைக்காரி, ஓர் இரவு, சொர்கவாசல் ஆகியவைகள் தமிழ்ப்பட துறையில் ஓர் திருப்புமுனையாகும் என்று கூறின் மிகையாகாது. அண்ணா அவர்களைப் பின்பற்றி கலைஞர் கருணாநிதி அவர்கள் தந்த 'பராசக்தி'யும் ஓரளவு புதுமுறுக்கை யேற்றிற்று என்று கூறலாம்.

இதைத் தொடர்ந்து ரத்தபாசம்—ரத்தக் கண்ணீர்—மலைக்கள்ளன் போன்ற சமூக முன்னேற்றத்திற்கான கருத்துடைய படங்கள் உருவாக்கப் பட்டதென்றாலும் மீண்டும் தமிழ்ப்படம் பழைய கருப்பன் நிலைக்கு மிக வேகமாக நடைபோடுகின்றன. அதுவும் சமீபகாலமாக வெளியிடப்படும் தமிழ்ப்படங்கள் வெளிவருவதும் திரும்பிப்போவதும் தெம்பர ரகசியம்போல ஆகிவிட்டது! இந்நிலை மிகவும் வருந்தக் கூடியதாகும்.

ஆனால், இந்திப் படங்களில் பெரும்பாலானவை மகத்தான வெற்றியும், ஓரிரண்டு படங்கள் படுதோல்வியும் அடைகின்றன. இன்னும் சொல்லப்போனால் வெளிநாடுகளுக்கும் அகில உலக சினிமாப் பட காட்சிகளில் இடம் பெறும் அளவுக்கும் தலைநிமிர்ந்து வளருகிறது. இதற்குக் காரணம் என்ன? மக்களின் அன்றாடப் பிரச்னைகளையும், நடைமுறையில் காண்பவைகளையும் சமூக முன்னேற்றத்திற்கு ஊக்கமளிப்பதுமான கருத்துக்களையும் அடிப்படையாக வைத்து கதையைச் சித்தரிப்பதேயாகும். இதைப்பற்றி விவரிப்பதெனின் பெருகும். பிறகு ஒரு சமயம் விளக்கிக் காட்டுகிறோம்.

*

இந்திப் படங்களுக்கு அறைகூவல் விடுக்கும் முறையில் தெலுங்குபடத் தயாரிப்பாளர்களாவது தங்களின் கருத்தையும் ஏன் பொருளையும் பயன்படுத்துவது குறித்து நாம் ஓரளவு ஆறுதல்கொள்ள வேண்டியிருக்கிறது.

மகத்தான வெற்றியும் புகழும்பெற்ற இந்திப் படங்களான பூட்பாலிஷ், தோ-பிகா-ஜமீன் (இரண்டு காணி நிலம்) ஆகியவைகளில் நிரம்பியுள்ள கருத்துக்களையும்—சம்பவங்களையும் பட ரசிகர்கள் அவர்களின் வாழ்நாள் வரை மறக்க முடியாதென்றே கூறலாம். அவ்வித புகழ்பெற்ற "தோ-பீகா-ஜமீன்"யும் பின்னடையச்செய்யும் வகையில் ரோஜுலுமாராயி என்ற தெலுங்குப்படம் தயாரிக்கப்பட்டு, நாடெங்கும் வெற்றிகரமாகக் காட்சியளித்து வருகிறது.

ஏழை விவசாயிகளைச் சுரண்டிவாழும் வர்க்கத்தினரின் அநீதியைச் சித்தரித்துக்காட்டி அந்த அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் காலம் மாறி வருகிறது என்பதை இக்கதாசிரியரான டேபுடி லட்சுமிநாராயணா எடுத்துக்காட்டுகிறார். புதுமை மட்டுமல்லாமல் எளிமையையும் கலந்த இந்த இணையற்ற படத்தை டைரக்டர் தாபி சாணக்யா என்பவர் உருவாக்கித் தந்திருக்கிறார். இவர் இந்தியாவிலேயே மிகக் குறைந்த வயதுடைய டைரக்டர் என்றும் தெரியவருகிறது. இவரின் முதல் உருவகமான 'அந்த மனவாள்ளே' (எல்லாம் நம்மவர்களே) என்றதெலுங்குப்படம் ஆந்திர நாட்டில் சக்கைபோடுபோட்டிருக்கிறது. அதைவிட பன்மடங்கு அதிகப் புகழை ரோஜுலு மாராயி குவித்து வருகிறது. ஆகவே திரைப்பட உலகிற்கு 'ரோஜுலு மாராயி' என்னும் கருத்துச் சித்திரத்தை தயாரித்துத் தந்த சாரதி பிலிம்ஸ் திரைப்பட ரசிகர்களின் மனப்பூர்வமான பாராட்டுதலுக்கு உரிமை பெற்றவர்கள் ஆவார்கள்

## ரோஜுலு மாராயி!

சாகரையா ஓர் நிலப் பிரபு. விவசாயிகளின் உழைப்பைச் சுரண்டிக் கொழுப்பவர். அபரிமிதமான வட்டி வாங்குவது அவருக்கு 'அல்வா' சாப்பிடுவது போல! இக் கொழுத்த பேர்வழிக்கு அவ்லூர் கர்ணமும், போலய்யா என்ற போக்கிரியும் துணையாக நின்றனர் கோடய்யா ஒரு ஏழை விவசாயி. நிலப் பிரபுவிடம் கடன் பட்டவர்—தனது மகளின் திருமணத்தின் செலவுக்காக இதே நிலப்பிரபுவிடம் மேலும் கடன் எதிர்பார்த்து நிற்கும் பரிதாப மனிதர். இவருக்கு வேணு என்ற மகன் உண்டு. அவனுக்குத் தனது தந்தையின் போக்கு பிடிக்கவில்லை காமுகன் ஒருவனின் வலையில் சிக்கி ஏமாற்றப்பட்டு கர்ப்பமடைந்த பருவத்தில் விரட்டப்பட்ட ஒரு பெண்ணின் வாழ்வைச் சீராக்க எண்ணிய முன்னாள் இராணுவ வீரன் ஒருவன் ஊராரின் ஏசுதலுக்கும் அஞ்சாது அப்பெண்ணை மறுமணம் செய்து கொள்கிறான். இந்தப் பெண்ணின் மகள்தான் ராதா. ராதாவை வேணு மணந்து கொள்ள விரும்புகிறான். அவனின் தந்தையோ தனது குடும்ப மானமே இதனால் பறிபோய்விடும் என்று கண்டித்து வேணுவை வீட்டைவிட்டு துரத்துகிறார். இந்நிலையில் நிலப் பிரபு சாகரையா சர்க்காரின் உத்திரவுக்கு மாறாக விவசாயிகளிடம் தரிசு நிலத்தை குத்தகை விடுகிறார். இந்த அநீதி பொறுக்க மாட்டாமல் விவசாயிகள் வேணுவின் தலைமையில் ஒன்று சேர்ந்து கலெக்டரிடம் நியாயம் கோருகிறார்கள். இறுதியாக நிலப்பிரபுவும் கர்ணமும் தண்டிக்கப்படுகிறார்கள், விவசாயிகளுக்கு நிலம் உரிமையாக்கப்படுகிறது வேணுவும் ராதாவும் திருமணம் செய்துகொள்கின்றனர். கதையின் சுருக்கம் இதுதான்,

விவசாயிகளின் அன்றாட வாழ்க்கைச் சம்பவங்கள், கிராமப்புறக் காட்சிகள், காதல் கட்டங்கள் ஆகிய அனைத்தும் தத்ரூபமாகத் தயாரிக்கப் பட்டுள்ளன. பாடல்கள் அனைத்தும் கிராமிய மெட்டில் ரசிகர்களின் உள்ளம் குளிரும் வண்ணம் அமைந்திருக்கிறது.

நடிப்பு—வேணுவாக நடிக்கும் நாகேஸ்வர ராவ் சிரமமின்றி ஆனால் பிரமாதமாக நடித்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெறுகிறார். ராதாவாக நடிக்கும் தோழியர் ஜானகியும் நாகேஸ்வரராவுக்கு சற்றும் சளைக்காமல் அபாரமாக நடித்திருக்கிறார்.

ஆனால் உடை விஷயத்தில் இன்னும் சற்று எளிமையைக் கையாண்டிருந்தால் ஜானகியின் நடிப்பு மேலும் சிறப்புற்றிருக்கும். கோடைய்யாவாக நடிக்கும் பெருமாள் சக்கை போடுபோடுகிறார் இன்னும் சொல்லப்போனால் இவருக்கே நடிப்பில் முதலிடம் கொடுக்கலாம். இவரின் மனைவியாகத் தோன்றும் ஹேமலதாவின் நடிப்பில் தாய்மை நிரம்பியிருக்கிறது. இவ்வம்மையாரும் ரசிகர்களின் பாராட்டுதலைப் பெறுகிறார். மாஜிராணுவ வீரராகத் தோன்றுபவரின் நடிப்பு பிரமாதமாயிருக்கிறது. கர்ணமாகத் தோன்றும் ரமணாரெட்டியும் திறம்பட நடித்திருக்கிறார், போலய்யாவாக வரும் ரேலங்கியின் நடிப்பு எதிர்பார்த்த அளவுக்கு சோபிக்கவில்லை. காரணம் (Over-act) மிகைப்பட நடிப்பதுதான்.

படப்பிடிப்பும் மற்ற அம்சங்களும் கூடுமான வரை நன்றாகவே அமைந்திருக்கிறது.

ஆக இவ்வித சிறப்புச்சிறப்புடன் காட்சியளித்து வரும் 'ரோஜுலு மாராயி' தமிழ்ப்படத் தயாரிப்பாளர்களுக்கு வருங்காலத்திலாவது நல்ல பாடத்தைக் கற்பிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

'ரோஜுலு மாராயி' தயாரிப்பின் வாயிலாக திராவிடத்தின் திரைப்படத் துறையில் ஓர் புதிய கட்டத்தையும் சிறப்பையும் உண்டாக்க காரணமாயிருந்த அனைவருக்கும் குறிப்பாக இப்படத்தயாரிப்பாளர்களான சாரதி பிலிம்ஸாருக்கும் நமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இத்துறையில் அவர்களின் பணி மேலும் பயனுள்ளதாக யிருக்கவும் ஆசைப்படுகிறோம். —வீரன்

## புயலெனச் சீறும் புரட்சி நடிகர்!

தன்னைக் கொல்ல வரும் எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக கோடரியேந்தி புயலெனப் போர் புரியும் காட்சி—இதுமட்டுமல்ல புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். புலியுடன் சண்டை செய்யும் காட்சிகளும் உள்ளன, ஆர். ஆர். பிக்சர்சாரின் குலேபகாவலியில். எம்.ஜி. ராமச்சந்திரனுடன் நடிகர்கள் தங்கவேலு, சந்திரபாபு மற்றும் நடிகைகள் டி. ஆர். ராஜகுமாரி, ஜி. வரலட்சுமி, ராஜசுலோசனா மற்றும் பலரும் நடிக்கின்றனர். இப்படம் இம்மாதக் கடைசியில் வெளியிடப்படும் என்று தெரியவருகிறது.

## உழவன் துயர்

காலைக் கீழ்வானில் கதிரவன் எழுமுன்னே
ஓலைக் குடிசையின் உள்ளிருந்து ஒருருவம்
சாலை வழிநோக்கிக் காளைக் கயிர்ப்பற்றி
கோலைப் பிடித்தகரம் குளிரால் தான் நடுங்க
வேலைச் செய்போனின் வேதனையைக் காணீரோ

உண்டு களித்திடவே உணவை தருபவனின்
பெண்டு பிள்ளைகளின் பிற்பட்ட நிலைதனையே
கண்டும் காணாது கண்மூடி கிடப்பதுதான்
தொண்டு என்றெண்ணி தூங்கிக் கிடப்பவரே
மண்டு,மவர்வாழ்வின் மாவேதனைக் காணீரோ?

பகலும் இரவும்தான் பாராது பாடுபட்டும்
புகலும் துன்பத்தின் பொல்லாத கொடுமையால்
திகிலும் நெஞ்சுடனே தீராத துன்பமெல்லாம்
அகலும் வழியின்றி அழுகின்ற உழவன் துயர்
இகலும் நாளென்றோ? ஏழை வாழ்வென்றோ

ஊர் ஆளவந்திருக்கும் உத்தமரே உம் கண்ணில்
ஏர் ஆளும் ஏழை ஏர்பிடிக்கும் உழவன்
ஓர் நாளும் பட்டதில்லை என்றாலும் ஓர்நாள்
நீர் ஆளும் ஆட்சிக்கு நிச்சயமாய் அவன் வருவான்
பார் ஆளும் தோழரே பாரீரோ அவன் துயரை?

சா. இராமநுசம், இரட்டணை

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர், என். வி. நடராசன், சோமு அச்சகம் 15, ரிலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை-1.

# END OF ISSUE